மலர் 116
இதழ் 12–13
பிரதி: ரூபா 4/=

Chundikuli Branch Library
-4-1990

# பாதுகாவலன்

## PATHUKAVALAN

பாதுகாவலன் பாஸ்குவிழாச் சிறப்பிதழ் 15–04–1990

# வெற்றிவிழாக் கொண்டாடுவோம்!
# வெற்றிவாழ்வு வாழ்வோம்!

## உயிர்ப்புவிழா வாழ்த்துக்கள்

எமது வாசக அன்பர்களுக்கும்
எழுத்தாளர் பெருமக்களுக்கும்
மற்றும் ஆதரவாளர்களுக்கும்
எம் உளமார்ந்த
உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

— நிர்வாகம்



சாவு வீழ்ந்தது.
வெற்றி கிடைத்தது.

இவ்வுலகில் வாழ்ந்தவர்களில்
மரணத்தை வென்றவர்
கிறிஸ்து ஒருவர் தான்,
அதனால் தான் இப்பெருவிழாவை
நாம் கொண்டாடுகிறோம்.
கிறிஸ்துவுடன் மட்டும்
இவ் உயிர்ப்பு விழா
முடிந்து விடவில்லை.
உலகில் வாழும் நாமனைவரும்
புதுவாழ்வில் உயிர் பெற
நம் வாழ்வு மாறவேண்டும்
நாமும் உயிர்க்க அதுவே வழி.

உலகத்தார் இழித்துரைத்த துன்பத்தை விவிலிய ஆசிரியர்கள் பாவத்தின் தண்டனையாகக் கருதிய துன்பத்தை இன்பமெனத் தழுவிக்கொண்டார் கிறிஸ்து. துன்பத்தில் ஏற்பட்ட கசப்பு அன்பால் இன்பமானது. புது வாழ்வு பெற்றது.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

தேனருவி

## ஆண்டவரின் இராவுணவு (12.04-90)
# விடுதலைக் கொண்டாட்டம்

கனானேய மக்கள் ஆண்டு தோறும் அறுவடை விழாவில் மகிழ்ந்திருந்தனர். கொல்லும் குளிரில் உறங்கிக் கிடந்த உயிர்களும், பயிர்களும் வசந்தத்தில் வாழ்வு பெற்று வளர்ந்து, கனிதந்த இயற்கையின் விடுதலையைத்தான் அறுவடை விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இவ்விழா இஸ்ராயேல் குலத்தவருக்கு இனத்தின் விடுதலை விழாவாக மாறியது. எகிப்திய அடிமைத்தனத்தில் மடிந்து கொண்டு கிடந்த யூத இனம் பாரவோனின் கொடும் பிடியிலிருந்து மீண்ட விடுதலை நிகழ்ச்சியை பாஸ்கா என ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தாம் ஓர் இனம், இறைவனால் விடுதலை செய்யப்பட்ட சுதந்திர மக்கள் என்ற சமூக, சகோதரத்துவ உணர்வையும் இவ்விழா அம்மக்களுக்கு உணர்த்தியது. ஆண்டுதோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாடிய இயேசுபிரான் தமது மரணத்தின் முன்பு இறுதி உணவில் பாஸ்காவிழாவிற்கு நிறைவான அர்த்தம் வழங்கினார்.

இறைவனையும் மனிதனையும், மனிதனையும்+ மனிதனையும் இணைக்கும் ஒரு புதிய உறவை ஏற்படுத்தினார். இயற்கையின் விடுதலையை மட்டுமோ, அன்றேல் ஓர் அரசியல் விடுதலை விழாவை மட்டுமோ கொண்டாடாமல், முழுமனித விடுதலைக் கொண்டாட்டத்திற்கு வித்திட்டார். என்று ஒரு மனிதன் வரையறைகளைக் கடந்து அடுத்த மனிதனை சகோதரனாக ஏற்றுக் கொள்ளுகிறானே அன்று அவன் விடுதலை பெற்றவனாகிறான். இந்த மேலான உறவு அன்பில் மட்டுமே மலர முடியும். உண்மை அன்பு, ஒருவனை விடுதலையாக்கும் என்பதால் அன்புக் கட்டளையைத் தன் இறுதி விருப்பமாக விட்டுச் செல்லுகிறார் இயேசு.

அன்பினால் உந்தப்பட்டு அன்பிற்கு அடிமையாகும் குரு தன் சீடர்களுடைய பாதங்களைக் கழுவினார். சாதி, இனம், குலம், மொழி, ஏன் மதம் கூட உண்மை அன்புக்குத் தடைச்சுவராக முடியாது. ஒரு புரட்சியை உருவாக்கும் யேசு தன்னை அன்பின் விலையாக்குகிறார்.

பாதம் கழுவும் நிகழ்ச்சி அவரது பணியின் கொடுமுடியாகிறது. அகங்காரம், சுயநலம், பேதம் பிணக்குகள் யாவும் தன்னை அழிப்பதன் மூலம் சுட்டெரிக்கப்படுகிறது என்பதைக்காட்ட- அப்பத்தை பிட்டுக் கொடுக்கிறார். தம்மை அணு அணுவாகப் பிட்டு, குருதியைக் கொட்டி, உயிர்ப்பால் செய்வதைவிட தன் அன்பை வேறு எப்படி வெளிக்கொணர முடியும்?

''என் நினைவாகச் செய்யுங்கள்'' ''நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்'' என அன்பு வாழ்வுக்கும், நற்கருணை விருந்திற்கும், அழைக்கும் இயேசு எம் வாழ்வில் உண்மை விடுதலை மலர வழி சமைக்கிறார்.

நற்கருணைக் கொண்டாட்டத்தில் உண்மை சகோதரத்துவ, சமத்துவ, சுதந்திர சமூகம் பிறக்கிறது. அதனால் நற்கருணைப் பக்தி பெறும் வாடிக்கையாகவோ, வெளிப்பகட்டாகவோ, பிரச்சனைக் கூடகமாகவோ அமைந்து விடக்கூடாது. அதில் கலந்து கொள்பவர்கள் இறைவார்த்தையால் தெளிவு பெற்று, அன்பில் இயக்கம் கொண்டு, சகோதரத்துவத்தில் வளர்ந்து, விடுதலைப் பயணத்தின் பாதையில் முன்னேறி விரைய வேண்டும்.

சுவாமி. ஜீவா போல் அ.ம.தி.

## "உயிர்த்த மீட்பர்"

மரணத்தை வென்றவனே!
மன்னவனே ! அன்புருவே!
தரணியுய்யப் பிறந்தவனே !
தாவீ தரசன் குலக்
கொழுந்தே!
கருணையுட னவதரித்தாய்!
காத்திடவே மெய்யறத்தை
அரணெமக்குன் திருவருளே
அறிவெல்லா மமர்ந்தவனே!

அ. ஜெசில்டா கனிமொழி
திருக்குடும்ப கன்னியர் மடம்,
மன்னார்.

## பாப்பரசரின் பிரதிநிதிக்கு
# யாழ். மறைவட்ட பொது வரவேற்பு

யாழ். மறைவட்டத்திற்கு முதல் முறையாக வருகை தந்த பாப்பரசரின் பிரதிநிதி மேதகு. பிரான்சுவா பக்குவே ஆண்டகையவர்கட்கு, பங்குனித் திங்கள் 26 ஆம் நாள் யாழ். மரியன்னை பேராலயத்தில்கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆண்டகை அவர்கள் ஆயர் இல்லத்திலிருந்து மலர்மாலை சூட்டப்பட்டு நாதஸ்வரத்தோடும் மறைவட்டக் குருக்கள், அனைத்துப் பங்குகளிலிருந்தும் வருகை தந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தினரோடும் பேராலயத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

ஆலய வாசலிலே தமிழ் மரபினிற்கமைய ஆராத்தி எடுக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். ஆலயத்தில் இடம்பெற்ற கூட்டுத்திருப்பலியின் போது ஆற்றிய மறையுரையில், ''திருமறையின் வளர்ச்சியும் விசுவாசமும், இன்று நான் காணக்கூடியதாயிருக்கின்றது. இறைப்பற்றும், மறைப்பற்றும் இங்கே செழித்துள்ளமைக்கு இறைவனுக்கு நன்றி கூறவேண்டும்'' என்றார்.

திருப்பலியின் பின்னர் பாண்ட் இசையுடன் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, ஒவ்வொரு பங்கின் சார்பிலும் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

யாழ். ஆயர் தலைமையில் நடைபெற்ற விழாவிலே ஆயர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

பொதுநிலையினர் சார்பில் ஆசிரியர் திரு. எஸ். அகஸ்தின் அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில் யாழ். மேற்றிராசனத்தில் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிப்படிகளை விளக்கினார்.

இதனை அடுத்து, யாழ். மறைவட்ட சார்பில் அன்பளிப்பு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆண்டகை அவர்கள் உரை நிகழ்த்தினார். அவர் தமதுரையில், "உங்கள் பெருந்திரளான வரவு, பாப்பரசரில் நீங்கள் கொண்டுள்ள பற்றையும் பக்தியையும் எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல, வேதவிசுவாசத்தையும், அதன் வளர்ச்சியையும் கூட எடுத்துரைக்கின்றது. இதனை நான் அவருக்கு எடுத்துரைப்பேன்'' என்றார். அவரின் உரை அருள்திரு. M.E. பயஸ் அடிகளாரால் மொழி பெயர்க்கப்பட்டது.

நன்றியுரை பேராலயப் பங்குத்தந்தை அருள்திரு. எஸ். எச். ஜெபநேசன் அடிகளாரால் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பாப்பரசரின் கீதத்துடன் விழா நிறைவெய்தியது.

---

## உயிர்ப்பு...

பொய்மை நிலை புரையோடிப் போன வையப்-
புதைகுழியைப் பொற்சுனையாய் மாற்றவென்றே
தெய்வமகன் சிரசினிலே! முடிமுள் ஏந்தி
செங்குருதி தான் சிந்திச் சிலுவை தாங்கி
துய்ய சுதன் சாட்டையடி மெத்த வாங்கி
துயர் களைப்புத்தானுற்று சிலுவை மீது
எய்தடித்த ஆணிகளிற் தொங்கி மாண்டும்
இனிதாகச் சொன்னபடி உயிர்த்திட்டாரே:

மூன்றாம் நாள் கல்லறையை விட்டு நீங்கி
முழுநிலவாய் யேசுபிரான் உயிர்க்க, ஒன்றும்
தோன்றாமல் பரிசேயர் மற்றும் மாக்கள்
தூயவரைக் காணாது விழிக்க லானார்.
சான்றோனை வதைத்தோர்கள் சாவின் பின்னே
தாம் வாழுந் திறனறியா திடிந்து போனார்,
ஊன்றாது யேசுபரன் வாக்கை நெஞ்சில்
உதறியவர் சாவிடத்தில் தோற்றே போவார்!

உள்ளத்துள் அவர் போட்ட அமுத வாக்கை
ஊன்றுவதால் நமக்குள் ஓர் உயிர்ப்புத் தோன்றும்
வெள்ளத்துள் மிதவையென அவர்தம் வாக்கு
மிதத்தியெம தான்மாவை மீட்டுக் காக்கும்!
பள்ளத்துள் வீழ்ந்தோரைக் காக்க வென்றே
பரம சுதன் பாடுற்று மரித்து மீண்டார் !
உள்ளத்துள் நாமுயிர்ப்புக் கொள்ள இந்நாள்
ஒரு சபதம் எடுத்துயர்வு காண வாரீர் !

நிலா தமிழின் தாசன்
தே. உப்புக்கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.

Chundikuli Branch Library

# விழாவை நாம் சிறப்புடன் கொண்டாடுவோம்!

# வாழ்த்துக்கள்! புத்தாண்டு வாழ்த்துக்கள்!!

நம்மைச்சூழ வாழும் இந்து, பௌத்த மக்கள் தமது புத்தாண்டு விழா கொண்டாட்டங்களில் கவனத்தை செலுத்திவரும் இந்நாட்களில் பாஸ்கா மறைபொருளை நாம் கருத்துடன் தியானித்து, பாஸ்கா விழாவை நாம் சிறப்புடன் கொண்டாட நம்மைத் தயார்ப்படுத்துகின்றோம்.

புறச்சூழல், பரிசுத்த வாரச் சூழலுக்கு, பொருந்தாததாக அமைந்துள்ள போதிலும், எமது பாஸ்கா கடமைகளில் தவறாது வாழ, கண்ணும் கருத்துமாயிருப்போம். எமது வழிபாடுகள் அவர்களுக்கு எந்தவிதத்திலும் இடையூறு விளைவிக்காத விதத்தில் அமைந்துவிட எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். எமது இந்து, பௌத்த நண்பர்களுக்கு உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

### இலங்கையில் உள்ள திருத்தந்தையின் பிரதிநிதி

### பேரருட்திரு பிரான்சுவா பக்வே

அவர்களுக்கு

## யாழ். மறைவட்டத்தில் வரவேற்பு



அமலமரித்தியாகிகள் தலைமை இல்லத்தில்.



புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில்.



புனித பத்திரிசியார் கல்லூரியில்.



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில்



திருக்குடும்பக்கன்னியர் மாகாணத்தலைவி இல்லத்தில்



யாழ். திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில்.

# கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு....?

பிறப்பவரெல்லாம் இறக்க வேண்டும். இதுதான் உலக நியதி. ஆனால் இறப்பதற்காக வென்று பிறக்கின்றார் ஒருவர். அவர்தான் எம் பாவங்களைச் சுமந்து எமக்கு விடுதலையளித்த எம்பெருமான் இயேசுக் கிறிஸ்து. பிறக்கின்றவன் இப்படித்தான் வாழவேண்டும் என்றல்லாமல் எப்படியும் வாழலாம் என்ற நியதியை வகுத்துக் கொண்டதனால் வந்த வினைதான் ஆதிமுதல் (மனிதனால்) வந்த சாவு. அந்தச் சாவு அன்றோடு மட்டும் நின்று விடவில்லை. அன்று தொட்டு இன்றுவரை நிழல் போல் எம்மைத் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது. மனிதன் மேல் பற்றிக் கொண்ட பாவதோஷங்களை அகற்றவேண்டும். அவனை ஆன்ம வழியில் நடத்திச்செல்ல வேண்டும் என்று பரமபிதா சித்தங் கொண்டார். அவரது திருச்சித்தம் நிறைவேற வேண்டும் என்பதற்காக தமது ஒரே பேறான மகனை மனித உருக்கொடுத்து இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கின்றார்.

பலரும் செய்த குற்றத்திற்காக ஒருவர் மாத்திரம் தண்டனையைப் பெறுவதென்றால் ...அதுவும் சிலுவை மரணத் தண்டனை. அந்த அவமானமுள்ள சிலுவை மரணத்தண்டனையை அனுபவிக்க யார்தான் முன் வருவார்கள்? தம் உயிரை மாய்த்துக் கொள்ள யார்தான் விரும்புவார்கள்?

எந்தவொரு மனிதனும் இதனை ஏற்றுக் கொள்ள ''சுயநலம்'' ஒரு போதும் அனுமதியளிக்காது. இப்படிச் சுயநலம் மிகுந்த இவ்வுலகை அநியாயங்களும், அக்கிரமங்களும் விளைந்த இவ்வுலகை பாவ இருள் சூழ்ந்த இவ்வுலகை மீட்கவேண்டும் என்ற கருத்திற்காக எல்லோருடைய பாவங்களையும் சுமப்பதற்காக முன் வருகின்றார் ஒருவர். அவர்தான் ஏழ்மையின் சாயல் பூண்டு மனித உருவில் வந்த மாசற்ற செம்மறி இயேசுக் கிறிஸ்து. அந்த மாசற்ற செம்மறியான இயேசுவைத்தான் எமது சமூகம் குற்றவாளிக் கூண்டிலே ஒரு கைதியாக ஒரு குற்றவாளியாக முள்முடி தரிக்கப்பட்ட பரிகாச ராசனாக நிறுத்தியிருக்கிறது. துன்புறுத்துதல்களுக்கு உள்ளாக்கப்படும் இயேசு உண்மையில் அவர் மாசற்றவர். துன்பப்படுவதற்கும் துன்புறுத்தப்படுவதற்குமானவர் இவர் அல்ல என்று சான்று பகருவதற்குக் கூட யாருமேயில்லை. இயேசு கைவிடப்பட்டவராக காணப்படுகின்றார். மக்கள் ஆட்சியாளருக்கு அஞ்சினார்கள். ஆளுனர்கள் அதிகார (தொனியில்) வெறியில் நிறைந்திருந்தார்கள் மூப்பர்கள் தலைமைக் குருக்கள் மக்களைத் தூண்டிய வண்ணமாயிருந்தனர். கூப்பாடு போடும் மக்கள் கூட்டம் அவனைச் சிலுவையில் அறையும் என்று தீர்ப்பும் கூறிவிட்டனர்.

தொடர்கிறது கல்வாரிப் பயணம். பயணத்திலே பல தடைக்கற்கள். ஆனாலும் சில ஆறுதல் சந்திப்புக்கள். கால்கள் தள்ளாடுகின்றன. செந்நீர் தாரை வார்த்து ஓடுகின்றன. பாவத்தின் பழு அதிகரிக்கின்றது. ஆனால் பயணம் தடைப்படவில்லை. கல்வாரிப் பாதையில் கல்லும், முள்ளும் காடுமலையும் கசிந்துருகி நிற்கின்றது. வெண்ணாடை இரத்தம் தோய்ந்த ஆடையாக மாறுகின்றது. கால்கள் தோய்ந்து முன்னேறத்தேடுகின்றது. ஆனால் மறைநூல் வார்த்தைகள் நிறைவேறுவதற்காகப் பயணம் தொடர்கின்றது.

ஏய் மனிதா! உன்னால் அந்தக் காட்சியைக் காணமுடிகிறதா? இல்லை. நிட்சயம் உன்னால் காணமுடியாது. ஏனென்றால் அகக்கண் உனது பார்வையைத் தடுத்துவிடுகின்றது. உன்னால் அந்தச் சம்பவத்தை நினைவு கூர முடிகிறதா? இல்லை. ஏனென்றால் உனது மனச்சாட்சி அதற்கு இடம் கொடுப்பதில்லை. உன்னால் புலம்பி அழ முடிகிறதா? இல்லை. ஏனென்றால் உனது இதயம் மரத்துப்போய் விட்டது. எனவே சிந்திப்பதற்கு உனக்கு இதுவே ஏற்ற காலம். தொடர்கின்ற கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு என்ன என்பதை நன்கு ஆழமாகச் சிந்தித்துப் பார். உதவிக்கரம் கொடுத்த சீமோனாக நிற்கின்றாயா? அல்லது வெண் துகிலால் திருமுகம் துடைக்கப்பெற்ற வீரப் பெண்மணி வெரோணிக்காவாக நிற்கின்றாயா? அல்லது புலம்பி அழும் பெண்களில் ஒருவனாக (ஒருத்தியாக) நிற்கின்றாயா?... இல்லை. நீ ஒரு வேளை ஒன்றுமே அறியேன். எனக்கு இதில் பங்களிப்பு இல்லை. அது உங்கள் பாடு என்று கையை விரித்து ஒதுங்கி நின்ற பிலாத்துவாக மாறிவிட்டாயா...?

எனவே கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு என்ன என்பதை சிந்தித்து விவேகத்துடன் செயற்பட்டு தொடர்கின்ற பயணத்தில் வீரத்துடன் செல்ல இன்றே நீ புறப்படுவாயா?......

ச. பிரபாகரன். (அஜந்த்)
முதலைகுத்தி
உயிலங்குளம்.

# மூவேளை செபவுரை

‘தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நற்பணியாற்றத் தன்னையே அர்ப்பணிக்கும் குரு ஜெபத்தின் மனிதர்’. திருத்தந்தை 2ஆம் அருள். சின்னப்பர், புனித இராயப்பர் Basilica வில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை ஜெபவுரையில் இக்கருத்து பற்றிய சிந்தனைகளை அளித்தார்.

தபக்காலம் ஜெபிக்கும் காலம். வாழ்வு முழுவதும் மூக்கிய இடம் வகிக்க வேண்டும் என்பது உண்மைதான் என்றாலும் யேசுவின் பாஸ்கா பேருண்மையைக் கொண்டாட நம்மை ஆழ்ந்த விதத்தில் தயாரிக்க அழைப்புவிடுக்கும் இந் 40 நாட்களிலும் ஊக்கம் தளராது மிகவும் ஆழ்ந்த விதத்தில் ஜெபிக்க வேண்டும். யேசு அவரின் போதகப்பணியைத் தொடக்க முன் பாலைவனத்தில் அவர் செலவிட்ட 40 நாட்களும் தந்தையோடு உரையாடினார். கடவுளின் மனிதனாக இருக்க வேண்டிய குரு ஜெபத்தின் மனிதனாகவும் இருக்க வேண்டும் என்றார் திருத்தந்தை. குருத்துவப் பயிற்சியின் இன்றியமையாத தேவைகள் பற்றி விவாதிக்கவிருக்கும் உலக ஆயர் பேரவை பணிக்குருத்துவத்தின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்றான ‘ஒரு குரு ஜெபத்தின் மனிதர்’ என்பது பற்றியும் கலந்துரையாடும் என்று சொல்லித் தன் கருத்துக்களைத் தொடர்ந்தார் திருத்தந்தை.

குருத்துவத்திற்கு தன்னையே தயாரிக்கும் குருகுல மாணவர்கள் தங்களை ஜெப வாழ்வுக்கும் பழக்கிக் கொள்ளவேண்டும். கிறீஸ்துவுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும், அர்ப்பணக்கவேண்டிய குருவுக்கு ஜெபம் இன்றியமையாதது. கிறீஸ்துவோடு மிக நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ள உதவும் ஜெபவாழ்வின்றி, அவரோடு நடத்தும் ஜெப உரையாடல் இன்றி ஒருவருடைய வாழ்வு கிறீஸ்துவுக்கு முற்றிலும் சொந்தமானதாக இருக்கமுடியாது.. இன்னும், அப்போஸ்தல பணிக்கு தளரா, அயரா ஜெபம் தேவை, இந்த ஜெபத்தின் மூலம் கிறீஸ்தவப்பணி, கிறீஸ்துவால் உந்துதல் பெற்று, அவரின் அருளால் மிகுந்த கனி தரும். தங்களிடம் ஜெபிக்க விண்ணப்பிப்போருக்காக ஒரு குரு ஜெபிக்க அழைக்கப்படுகிறார். இந்த ஜெபத்தின் வழியாக இவர் அநேக வரங்களை தான் ஜெபிப்போருக்காக அடைந்து தருகிறார். நித்திய குருவாகிய கிறீஸ்து நமக்காகத் தொடர்ந்து பரிந்து பேசுகிறார் என்று புனித சின்னப்பர் எ[illegible]ரயருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகிறார்.

கிறீஸ்து தம் வழியாகக் கடவுளை அணுகிச் செல்வோரை முற்றிலும் மீட்க வல்லவராக இருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார். கிறீஸ்துவைப் பின்பற்றி குருவும் கடவுளிடம் தம் மந்தைக்காகப் பரிந்து பேசும் பணியைத் தொடர்ந்து செய்யவேண்டும். ஆதனால் குருத்துவத்திற்கு தயாரிக்கும் இளைஞர்கள் ஜெப வாழ்வில் நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதனால் குருத்துவத்திற்கும் மேலாக அவர்களின் குருத்துவ வாழ்விற்கும், மீட்புப் பணிக்கும் ஜெபம் மிகவும் முக்கியமானது என்பதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். இவ்வுணர்வில் தான் நன்கு ஜெபிக்க கற்று அதைப் பணிவாழ்வில் நன்கு பயன்படுத்த முடியும். இறுதியாக குருத்துவப் பயிற்சி பெறுவோர் ஜெபத்தின் மட்டில் ஆர்வத்தையும், விருப்பத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு உரைத்த திருத்தந்தை இறுதியாகக் குருக்கள் ஜெப வாழ்வில் நன்கு உருவாக்கப்படவும், உலக ஆயர் பேரவை இதற்கான வழிமுறைகளைக் கொடுத்து உதவவும் அன்னை மரியின் பரிந்துரையை இரஞ்சுவோம் என்று மூவேளை செபவுரையை முடித்தார்.

## ஒற்றுமையே உயர்ந்த ஏணி




இன்றைய கால கட்டத்திலே ஒற்றுமை என்பது ஒரு சாக்கடைப் பொருளாகவே கருதப்படுகிறது.அமைதி அருகி வருகிறது. நாடுகளுக்கிடையே, இனங்களுக்கிடையே, சமூகங்களுக்கிடையே ஒற்றுமையில்லை. நாளுக்கு நாள் போர் முழக்கங்கள் அதிகரிக்கின்றன. யுத்த அபாயங்கள் தோன்றுகின்றன. எங்கு பார்த்தாலும் போரும் சண்டையும்,கொலையும், கொள்ளையும், காடைத்தனங்களும் தாண்டவமாடுகின்றன. உலகில் பல கோடி மக்கள் பசியினாலும், பட்டினியாலும் பரகதியடைகிறார்கள்.

இப்படியான காலப்போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம், மனிதனின் ஒற்றுமைக்குச் சவால் விடுபவை எவை? மனிதனின் ஆணவம், அகங்காரம், போட்டி, பொறாமை, தன்னலம், பேராசை போன்றவைதான்.

இவையாவும் மனிதனிடமிருந்தே பிறக்கின்றன. ஆகவே மனிதன்தான் ஒற்றுமையைச் சீர்குலைக்கின்றான். மனிதன் தான் ஒற்றுமைக்குச் சமாதி கட்டுகிறான்.

மானிடராகப் பிறந்த நம் ஒவ்வொருவரிடமும் நல்லமனம் தூயமனம் இருக்கவேண்டும். இந்த நல்லமனம் மக்களிடையே இல்லாமையே ஒற்றுமை இல்லாமைக்குக் காரணம். நல்லமனம் என்பது எதைக் குறிக்கிறது? அன்பு மனம், இரக்கம், சகோதரப்பாசம் உள்ள இதயம், பழிவாங்காத மனம் உயிரின் விலை மதிப்பை உணர்ந்து கொள்ளும் மனம், இத்தகைய மனம் இருப்பின் ஒற்றுமை, சமாதானம் இருக்கும். ஆனால் மனிதமனம் மிருகமனமாக மாறிவிட்டது. நல்ல மனம் கல்மனமாக மாறிவிட்டது. இதுதான் மக்களிடையே ஒற்றுமை இல்லாமைக்குக் காரணம்.

''ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு'' நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு என்ற முதுமொழிக்கேற்ப நாம் அனைவரும் நாம் வாழும் சமுதாயத்தில் நாட்டிலே பாடசாலையில், ஒற்றுமையை உருவாக்கப் பாடுபடுவோம். ஒற்றுமையே எமது வாழ்விற்கு உயர்ந்த ஏணி.

அன்ரனி அனஸ்ரின் றோச், தாளையடி.

## இளைஞனே இருண்ட உன் வாழ்வு ஒளிரட்டும்

இயேசுவின் அன்புப்பிள்ளையாகிய இளைஞனே! உன் தந்தையாகிய கிறிஸ்துவும் 33வயது நிரம்பிய இளைஞனாக இவ்வுலகில் வாழ்ந்தார் அல்லவா? அவர் தம் வாழ்வில் இன்பத்தை அனுபவித்தாரா? இல்லவே இல்லை. அவர் பிறக்க மாளிகை கிடைக்கவில்லை. மாறாக மாட்டுத் தொழுவம் தான் கிடைத்தது. அவர் இறக்க பஞ்சு மெத்தை கிடைக்கவில்லை. சிலுவைமரம் தான் கிடைத்தது. அடக்கம் செய்யக் கூட சொந்தக் கல்லறை கிடைக்கவில்லை. மாற்றானின் காவல் கல்லறை தான் கிடைத்தது. அன்பு இயேசுவின் அன்பு இளைஞனே! உனக்கு வாழ்வளிக்க வந்த பரமனின் பரிதாப நிலையை உன் வாழ்வில் ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உனக்கு உயிர் அளித்து உன்னை வாழவைக்க நீ சந்தோசமாக வாழ உனக்காக மானிட வேடம் பூண்ட உன் மீட்பர் இயேசு உன் இனத்தால் ஏற்றுக்கொள்ளப்படாதவராகவும், விண்ணில் வாழும் பரம தந்தையால் கை நெகிழப்பட்டவராகவும் விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவே கள்வரின் நடுவே கயவனைப்போல் மூன்று ஆணிகளோடு தொங்குகிறார். பச்சை மரத்துக்கு இக்கெதி என்றால் பட்டபரத்துக்கு எக்கெதி என்று சிந்தித்துப் பார் அன்பு நெஞ்சமே!

மனிதர்கள் பெலவீனர்கள். அதனால் தான் மனித உருவில் தோன்றிய கிறிஸ்து கூடத் தன் துன்ப வேளையில் தன் பிதாவை நோக்கி ''என் பிதாவே! இந்தத்துன்பக்கலன் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும்'' என்று பணிவாகக் கேட்டுக்கொண்டார். எந்த மனிதனுக்கும் பாவம் செய்ய விருப்பம் இல்லை ஆனால் ஏதோ ஒரு விதமாகப் பாவத்துக்கு அடிமையாகிறான். இது அவனுடைய இரத்தத்தோடு ஊறிவிட்டது. திருமுழுக்கென்னும்

க. ஜெயமதி

அருட்சாதனத்தை மூடி என அணிந்த நீ அதை உன்வாழ்வில் எவ்வளவு தூரம் பிரதிபலிக்கச் செய்கிறாய்? அன்பு இளைஞனே! உன் வாழ்விற்கு ஒளி என உதித்த உன் மீட்பர் இயேசுவின் வாழ்வை உன் வாழ்வில் கரு என வைத்து உன்னில் வாழ்வது நீ அல்ல, கிறிஸ்துவே வாழ்கிறார் என்ற நினைவுடன் அவரின் நேரிய ஒடுங்கிய பாதையில் வீறு நடை போடு!

## வெற்றியின் தாய் தோல்வியே

தோல்வியைக் கண்டு துவளாதே—இங்கு
துட்டரைக் கண்டு மிரளாதே!
தோல்வியே வெற்றியின் படியளவோ - நாம்
தொடர்வது வெற்றியின் அடியளவோ

தோல்வியின் காரணம் ஆராய்வோம்—மேலும்
துடிப்புடன் படிப்பதில் நாம் மாய்வோம.
தோல்வியே வெற்றியின் தாயென்றார் — பின்
தூயவராவது சேயென்றார்.

அரசன் ஒருவன் இருந்தானாம்—அவன்
ஆறு முறைகள் தோற்றானாம்.
சிரசாய் முயற்சி மேற்கொண்டான்—பின்
சென்றான், ஏழாம் முறை வென்றான்.

துக்கப்படுவதும் அழுவதும் வீண்—உன்
துயரைத் துடைக்க உழைப்பத்த தேன்
பட்டென்றெழுந்து செயலாற்று - உன்
பருவத்தில வீசும் குளிர் காற்று.

S. அனரன் யூட் ரவி
புனித மடுத்தீனார் குருமடம்.

## நல்ல நண்பர்கள்

★ நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பதுபோலவே, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.

★ நல்ல நண்பர்கள் யார் என்பது அனுபவத்தின் மூலமேதான் தெரியுமே தவிர, சாதாரண அறிவினால் கண்டுகொள்ள முடியாது. யாரோடு நீ பழக ஆரம்பிக்கின்றாயோ அவனோடு நீ இன்மையாகப் பழக வேண்டும். (தொடர்ச்சி 13 ஆம் பக்கம்)

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-61

அடைக்கலம்:- "பணம், பெண், பாசம் இதிலை எதண்ண முக்கியமானது?

குருசுமுத்தண்ணை:- இப்ப முதல் விஷயம் தான் எல்லாத்தையும் வெல்லுது பார். ஆனால் நிலைக்கிறது கடைசி விஷயம்தான். அதை காசாலை வேண்ட முடியாது பார்.

அடைக்கலம்:- அப்ப நடுவில உள்ளது எப்படி அண்ணே?

குருசுமுத்தண்ணை:- பெண்களில பாசம் வைக்கலாம். மனைவியைத்தவிர மோகம் கொள்ள நினைச்சா உள்ளதையும் அள்ளிப்போகும், அதுக்குப் பிறகு அதால மோசம் தான் பாரு




## நற்செய்திக்கோர் பின்னணி (8)

### நற்செய்தியாளர் மாற்குவின் தனிப்பட்ட நோக்கம் (ஆ)

கலாபனையினர்களால் நொந்து நெடிந்து போயிருந்த கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் திடப்படுத்த விழைந்த மாற்கு "கிறிஸ்துவே துன்பப்பட்டார். அவரே துன்பத்தின் வழியாகத்தான் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றினார். பாடின்றிப் பட்டமில்லை" என்று எடுத்துக் கூறி துன்பத்தின் பொருளை கிறிஸ்துவின் வாழ்க்கையோடு இணைத்து பொருள்காண விளக்கி எழுதுகின்றார். நற்செய்தியாளர் மாற்கு, கி. பி. 65இல் கிறிஸ்துவால் தலைவராக ஏற்படுத்தப்பட்ட இராயப்பர், அவர் இன்று இல்லை. ஆகவே இராயப்பர் போதித்த பாணியிலே அவர் போதித்த செய்திகளின் சுருக்கத்தை தொகுத்துக் கொடுக்கின்றார். துன்பத்திற்கு விளக்கம் தருவதற்கும் இராயப்பரின் போதனையின் தொகுப்பை விளக்கவும் மாற்கு இந்த நற்செய்தியை எழுதுகின்றார்.

இன்னும் மனிதனாகப் பிறந்தவர் உண்மையிலேயே கடவுளின் மகன் (1: 1, 1: 25, 3: 11). அவரே ஆண்டவரும் கிறிஸ்துவும். அவர் தமது பாடுகளினாலும், சிலுவை மரணத்தினாலும் உலகிற்கு மீட்புக்கொணர்ந்தார். (10 :32–34) அவரில் விசுவாசம் கொண்டு திருமுழுக்குப் பெற்றால் மீட்படைவோம் (16: 15) என்று மக்களுக்கு பறைசாற்றவுமே தமது நூலை மாற்கு எழுதினார். கிறிஸ்துவினால் கொண்டுவரப்பட்ட இந்த மீட்பு அவரது பாடுகளினாலும், மரணத்தினாலுமே வருகிறது என்பதை தமது நூல் முழுவதும் விளக்குகின்றார். இவரது நற்செய்தி நூலைப் படிக்கும்போது துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பாணியில் கிறிஸ்துவின் எளிமையையும், துன்பதுயரங்களையும் விரிவாக விளக்குகின்றார் நற்செய்தியாளர் மாற்கு.

தொடக்ககால ஜெபக்குழு மாற்கு வீட்டில்தான், ஒன்று கூடியது (அப்: பணி 12: 12) தொடக்ககாலம் தொடக்கம் திருச்சபையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் மாற்கு. எனவே ஆதித் திருச்சபையைப் பற்றிய விபரம் எல்லாம் அவருக்கு நன்கு தெரியும்.

எஸ். அந்தோனிப்பிள்ளை

அறிந்துகொள்ளுங்கள் (105)

## வரலாற்று அரசியல் பின்னணி

ஆர்கெலாவுஸ்:

ஏரோது இறந்தபின் சூசை மரியாள் யேசுவுடன் இஸ்ராயேல் நாட்டிற்கு வந்தார். ஆனால் யூதேயாவிலே ஆர்க்கெலாவுஸ் தன் தந்தை ஏரோதிற்குப் பதிலாக அரசாள்பதாகக் கேள்வியுற்று அங்கு செல்ல அஞ்சினார் (மத் 2: 19—22) பெரிய ஏரோது இறந்தபின் ஏரோது ஆட்சி செய்த நாடு. பேரரசன் அகுஸ்துஸ் செய்த ஒழுங்கு முறைப்படி ஏரோதின் மூன்று புதல்வர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது யூதேயா சமாரிய இதுமேயா ஏரோதின் எஞ்சிய மக்களுள் மூத்தவனாகிய ஆர்க்கெலாவுசுக்கு கொடுக்கப்பட்டன இவனுக்கு உரோமைப் பேரரசு அரசன் என்ற பட்டத்தைக் கொடுக்கவில்லை. ஆளுநன் என்றே இவன் ஆட்சி செய்தான்

இவனது ஆட்சியும் தந்தை ஏரோது போன்றதே தனது மனம் போனபோக்கின்படி கொடுங்கோன்மையுடன் ஆட்சி செய்தான். பெரிய குருவை தலைமைப் பதவியிலிருந்து நீக்கினான், மக்களைத் துன்புறுத்தினான் யூதச்சட்டத்திற்கு மாறாக மணம் செய்தான் எட்டு ஆண்டுகள் இவனது கொடுமையான ஆட்சி நீடித்தது. மக்கள் இவனை வெறுத்தனர் யூதப் பேரரசனிடம் யூதர்களும் சமாரியர்கள் இவனது ஆட்சி பற்றி முறையிட்டனர்

இதன் காரணமாக கி. பி 6ஆம் ஆண்டு பதவியிழந்து நாடு கடத்தப்பட்டான். இவனது பகுதியை ஆள ஓர் உரோமை ஆளுநன் நியமிக்கப்பட்டான். இந்த உரோமை ஆளுநன் சீரியாவிலுள்ள அரச பிரதிநிதியின்கீழ் அலுவல் ஆற்றினான். இவ்வாறாக இஸ்ராயேல் நாட்டில் உரோமை ஆட்சி மேலும் வேரூன்றியது.

இ. ம. ஜெய்சிலன்




ஒளி: 4 சுடர்: 11

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### விழி வழி!

## இதய உணர்வு

ஆண்டவரே! இருண்ட என் உள்ளத்திற்கு ஒளியூட்ட நீர் வந்தபோது நான் உம்மை வரவேற்கவில்லை. இயேசுவே! என் இதயம் இன்று சோதனைகளாலும், வேதனைகளாலும் நெருக்குண்டு, நொந்து குருதி வடிக்கிறது. எனது உண்மையான அன்பு மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கிறிஸ்தவ மக்களே! உம்மை இன்னும் புரிந்துகொள்ளாது, உலக வெள்ளத்தில் அடிபட்டுப் போகிறார்கள். அந்த வெள்ளத்தில் தாம் குளித்துக்களிப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

நீர் உண்மையான ஆயனாய் இருக்கும்போது, அதை உணர்ந்து கொள்ளாது தலைவரைத்தேடி அலைகிறேன். ஆண்டவராகிய யேசுவே! "நான் தாகமாயிருக்கிறேன்," என்று நீர் முறையிட்டதைப் புரிந்து கொள்ளாது, கசப்பான காடி தந்தவனாக நான் இருந்ததை நினைத்துக் கண்ணீர் வடிக்கிறேன்.

அன்பான அருள்நாதரே!
மானிடத்தின் மீட்புக்காக
உயிர் துறந்த தியாகச்செம்மலே!
வருங்காலத்தில் உம் குரலுக்கு
என்றும் செவி சாய்க்கக்
காத்திருப்பேன். உம் வரவுக்காகக்
கண்விழித்தும் காத்திருப்பேன்
உன்பாதச்சுவடுகளில்
என் பாதம் பதித்து நடந்து செல்வேன்.

இதுவே என் இதயத்தின் உணர்வு
இந்த உணர்வு என்றும் என்னுள்
நிலைத்திருந்து செயற்பட உம்மை வேண்டுகிறேன்.

அன்பின்
அன்பு விழி

## உயர்வடைய உண்மையே பேசு.

பொய் பேசுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் உலகிலே அதிகமாக உள்ளனர். பொய்யும், பித்தலாட்டமும் ஒருவனை நிச்சயம் வாழ்வில் உயர்த்தாது. ஆரம்பத்தில் பொய்யானது ஒருவனது வாழ்வில் இன்பத்தை நல்கினாலும், பின்நாளில் அவனைத் துன்பத்தில் மூழ்கச் செய்யும்.

"பொய்யாமொழிப் புலவர் உரைத்தது போல ஒருவன் தனது மனச்சாட்சிக்கு ஏற்ப பொய் சொல்லாது நடப்பானேயானால் அவன் உலகத்து மக்களின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்'

உலகில் சில மனிதர்கள் ஏதாவது ஒரு சமயத்தில் எதற்காவது பொய் கூறுகிறார்கள். ஒருவன் ஒரு முறை சொல்லும் பொய்யானது அவனை மேலும், மேலும் பொய்யனாக்குகிறது. எனவே இனி எந்த ஒரு காரியத்திற்காகவும் பொய் பேசுவதில்லை என நாம் உறுதி பூண்டு அதனை வாழ் நாள் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகி பொய்மையைக் குழி தோண்டிப் புதைத்து மெய்மைக்கு நம உள்ளத்தில் இடம் கொடுத்து உயர்வடைவோம்.

T. ஜெனிவி பெர்னாண்டோ
அங்: எண் B–34.




### 21. அவுரேலியன் ஆட்சியில்...

திருச்சபை அனுபவித்து வந்த
சிறிது காலச் சமாதானம்
அவுரேலியன் ஆட்சியில்
மீண்டும் குழப்பப்பட்டது.
கி. பி. 270இல் ஆட்சிக்கு வந்த அவுரேலியன்
ஆரம்பத்தில்
கிறிஸ்தவருக்குச் சாதகமாகவே இருந்தான்.
ஆயினும்
கி. பி. 274இன் பிற்காலில்
கலாபனைத் தீயை தூண்டிவிடும்
அவுரேலியப் பேரரசனை நாங்கள் பார்க்கிறோம்.
நீராக இருந்தவன்
ஏன் நெய்யானான் என்பது
வரலாற்றின் புதிரே.
கிராமங்களிலும், ஊர்களிலும்
புகைத்து கொண்டிருந்த கலாபனைத் தீயை
சாம்ராஜ்யமெங்கும் மூண்டெழச் செய்யக்கூடிய
புதிய கட்டளையை அவன் பிறப்பித்தான்.
ஆயினும்
அவனது முடிவு
அத்தகைய பரவலுக்குத் தடையானது.
கி. பி 275இல்
பேசியாவிற்கெதிரான ஒரு படையெடுப்பின்போது
கொலையாளி ஒருவனால்
அவுரேலியன் இறந்தான்.
ஆக,
கட்டளை நாடு முழுவதும் பரவ முன்பே
கட்டளையிட்டவன் மடிந்து போனான்.
அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தாசிரசோ (275-276)
அன்றேல் பின்வந்த 10 ஆண்டுகளில்
ஆட்சி புரிந்த
புறோபஸ்,
காருஸ்,
கரினுஸ்,
ஆகியவர்களுள் எவரோ
கிறிஸ்தவத்தில் தலையிடவில்லை.
அதனால்
கிறிஸ்தவருக்கான அடுத்த வேதனை
கி. பி. 284 ஆட்சிக்கு வந்த
தியோக்கிளேசியன் காலத்தில் தான் ஆரம்பமானது.
அவுரேலியன் காலத்தில் மரித்தவர்களில்
பாப்பு புனித பெலிக்ஸ்,
பாரிஸ் நகர ஆயர் தேனிஸ்,
புனித கோனோன்
ஆகியோரே முக்கியமானவர்கள்.

— சந்திரன்

## சிதறிய சிந்தனைகள்

★ உணவு, உடை, உறையுள்தான் முக்கியமானதென நினைத்து வாழுகின்றார்கள், அதைவிட இன்னுமொன்று உள்ளது அதுதான் உள்ளம்.

★ மனிதனிடம் மனம் இருக்கிறதா என்று பார்ப்பது நலம். ஏனெனில் மனம் இருந்தால்தான் மாண்பை உணர முடியும்.

★ வாழவேண்டுமென்று ஆசைப்படுவது இயல்பு, வாழ்ந்து காட்டவேண்டுமென்று நினைப்பது மனிதப் பண்பு.

(M. ஜோண் பற்றிக்)

# மீட்பரின் பாதுகாவலர்

### திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வழங்கிய

## அப்போஸ்தலிக்க அறிவுரை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

11. தனது மகனின் விருத்தசேதனமே ஒரு தந்தையின் முதல் சமயக்கடமையாகும். இந்தச் சடங்கின் மூலம் இயேசுவின் பட்டில் தமக்குள்ள உரிமையையும், கடமையையும் சூசை பிரயோகித்தார்.

பழைய ஏற்பாட்டின் சடங்குகள் எல்லாம் உண்மை உருவின் நிழலாகும் என்னும் தத்துவமானது. (எபி. 9: 9; 10; 1), இயேசு ஏன் அவற்றை ஏற்கிறார் என்பதை விளங்க வைக்கிறது. ஏனைய சடங்குகள் எல்லாவற்றையும் போலவே விருத்தசேதனமும் இயேசுவில் "நிறைவுபெறுகின்றது." இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் அடையாளமாக இருந்தது விருத்தசேதனம். (ஆதி 17: 13.) இந்த உடன்படிக்கையானது பழமையான வாக்குறுதிகள் அனைத்தினதும் "ஆப" ஆக இருக்கும் இயேசுவினிடத்தில் முழுப்பலனையும், பூரண நிறைவையும் பெறுகின்றது. (2 கொரிந் 1-20).

12. விருத்தசேதனத்தின்போது சூசை குழந்தைக்கு "இயேசு" எனப் பெயரிடுகிறார். இந்த ஒரு பெயரிலேயே மீட்பு உள்ளது. (அப். பணி 4: 12). சூசைக்கு பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்டபோது இப்பெயரின் உட்பொருளும் வெளிப்படுத்தப்பட்டது. 'அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார். (மத். 1;21). பெயரைச் சூட்டும்போது சூசை இயேசுவின் மீது தந்தைக்குரிய சட்டபூர்வமான தனது உரிமையை வெளிப்படுத்துகிறார். பெயரை உச்சரிக்கும்போது மீட்பராக அக்குழந்தை ஆற்றப்போகும் பணியை சாற்றுகின்றார்.

13. லூக்காஸ் குறிப்பிடும் இச்சடங்கில் (2;22) தலைச்சன் பிள்ளையை மீட்டுக்கொள்வதும் அடங்கும். பன்னிருவயதில் இயேசு தேவாலயத்தில் தங்கியமையை விளங்கிக் கொள்வதற்கு இச்சடங்கானது துணை புரிகின்றது.

தலைச்சன் பிள்ளையை மீட்டுக்கொள்வது ஒரு தந்தையின் மற்றொரு கடமையாகும். இதனைச் சூசை நிறைவேற்றுகின்றார். இறைவனுக்குச் சொந்தமாக்கும் பொருட்டு அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட உடன்படிக்கையின் மக்களை இத்தலைச்சன் குழந்தை குறித்துக்காட்டுகின்றது. இதிலும், மீட்பின் உண்மையான விலையாகிய இயேசு இப்பழைய ஏற்பாட்டுச் சடங்கை "நிறைவுசெய்வது" மட்டுமல்லாது, அதே வேளையில் அதற்கு மேம்பட்டும் நிற்கின்றார். ஏனெனில், அவர் மீட்கப்படவேண்டிய ஒரு குடிமகன் அல்ல, மீட்பின் கர்த்தரே அவர்.

நற்செய்தி நூல் ஆசிரியர் "குழந்தையைக் குறித்துக் கூறியவற்றைக் கேட்டு அதன் தாயும், தந்தையும் வியந்து கொண்டிருந்தனர்" எனக் குறிப்பிடுகிறார் (லூக். 2;33). விசேஷமாக சிமியோன் தனது இறைபுகழ்ச்சிப் பாடலில் இயேசுவை "மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பு... புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை, எனவும் "எதிர்க்கப்படும் அறிகுறி" எனவும் குறிப்பிடுகிறார் (லூக்.: 2;30-34).

14. அலயத்தில் காணிக்கை கொடுத்தபின் நற்செய்தியாளர் லூக்காஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்; "ஆண்டவருடைய சட்டப்படி எல்லாம் நிறைவேற்றியபின், அவர்கள் கலிலேயாவில் உள்ள தம் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள். பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார். ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார். கடவுள் அருளும் அவர் மீது இருந்தது. (லூக் 2; 39-40).

ஆனால், மத்தேயுவின் வாசகப்படி கலிலேயாவுக்கு அவர்கள் திரும்புமுன் மற்றொரு முக்கிய சம்பவம் நடைபெற்றது. அச்சம்பவத்தின்போது இறைபராமரிப்பு மீண்டும் சூசையின் உதவியை நாடியது. அவர்கள் சென்றபின், இதோ ஆண்டவரின் தூதர் சூசைக்குக் கனவில் தோன்றி, "எழுந்து பிள்ளையையும், தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம். நான் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையைத் தொலைக்க ஏரோது தேடப் போகிறான்" என்றார். (மத். 2:13). கீழ்த்திசையிலிருந்து வந்த ஞானிகளிடமிருந்து ஏரோது 'யூதர்களின் அரசரது' பிறப்பைப்பற்றி அறிந்தான். ஞானிகள் சென்றபின், அவன்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

# பாவி, நீ இதுவரை

றோமை வருடம் 783 ஏப்ரல் மாதம் 6 ஆம் நாள் இரவு. யூதமுறைப்படி அடுத்த நாள் நிசான் மாதம் 16 ஆம் நாள் தொடங்கிவிட்டது. கடத்தல் திருநாள் ஒன்றித்த ஓய்வு நாள் சூரியன் மறைந்ததோடு முடிந்தது. சென்ற நாட்களின் சம்பவங்களால் இளைத்துக்களைத்த உளத்தையும், உடலையும் தேற்றும் ஆசையால் அமர்ந்து படுக்கையில் சாய்ந்தேன்.

கண்கள் மூடின, ஆனால் நித்திரையோவரவில்லை. வாங்கும் மூச்சும், இதயத்துடிப்பும் காதில் கேட்டன, அதிலும் மேலாக ஒரு சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. கடந்த சம்பவங்கள் திரைப்படம் போல மனக்கண்முன் ஓட அந்த ஒலி அதைத்திறனாய்வுசெய்து என்னைக் குழப்பியது. இரண்டரை வருடமாக நசரேத்தூர் யேசு நமது நாட்டின் அமைதியைக் குலைத்து வந்தான். சென்ற வியாழன் இரவிலேதான் அவனைக் கைதுசெய்து வெள்ளிக்கிழமை றோமரிடம் கையளித்து அவனைத் தொலைத்துவிட்டேன். ஆயினும் சனிமுழு நாளும் என் மனம் ஓயவில்லை. தேவ தூஷணன் இராசதுரோகி எனக் கொலைத்தீர்வைபெற்ற அவன் சொன்ன சவால் என் மனத்தை உறுத்தியது "இந்த ஆலயத்தை இடியுங்கள். மூன்று நாட்களுள் நான் அதை மீண்டும் கட்டி எழுப்புவேன்" என்று தன் உடலைப்பற்றியே சொல்லியிருந்தான். ஆகவேதான் ஓய்வுநாள் முடிந்த உடனே றோமை ஆளுநன் பிலாத்துவிடம் போனோம். பிரேதம் அடக்கியிருந்த அரிமத்தியா யோசேப்புவின் கல்லறைக்கு முத்திரையிட்டுக் காவல்புரியும்படி கேட்டோம். அந்தத் தந்திரி பொறுப்பேற்க மறுத்துவிட்டான். ஆயினும் எமது சேவகரை வைத்துக் காவல் செய்ய உத்தரவு அளித்தான். உடனே அங்கு சென்றோம். பூரண நிலவு எறித்த வேளையிலும் பந்தங்களோடு கல்லறையுள்ளே போனோம். சீலை சுற்றிவைக்கப்பட்டிருந்த யேசுவின் பிரேதத்தைப்பார்த்தேன். என்ன பயங்கரமான காட்சி, அது எனது மனத்தை விட்டு மறைய மாட்டேன் என்கிறது.

அந்த உருவும், இந்த ஒலியும் சேர்ந்து என் அமைதியைக் குலைக்கின்றன. அதனால் பொறுதியை இழந்து "இக்காரிருளிலே நிசத்த நேரத்திலே என்னைக்குழப்பும் நீயார்" என்று குரல் கொடுத்துக் கேட்டேன்.

கிடைத்த விடை என்னைத் திடுக்கிடவைத்தது. என்னை நீ அறியாயா? உன்னுடன் எப்போதுமே இருக்கிறேனே! என் பெயர்தான் மனச்சாட்சி, படைத்த கடவுள் உனக்குத் தந்த பகுத்தறிவின் சத்தம். நான் கடவுளுக்குச் சாட்சி, உனக்கும் சாட்சி, மனித மனத்திலே சக்திகள் இரண்டு உண்டு, நியாய புத்தியும், சுயாதீன சித்



தமும் உன்னதமான கொடைகள். புத்தியாலே உண்மையை அறிந்து சித்தத்தாலே நன்மையைத் தெரிந்துசெய்ய உனக்கு வல்லமை அளித்தான். எது சரி, எது பிழை என உனக்கு வழி காட்டவே என்னை அவன் உன்னுள் வைத்தான். என் குரலைக் கேளாது தள்ளிவிட்டால் அதை மறுமுறை கேட்கும் சக்தி உன்னிலே குறைந்துவிடும். காலகதியில் நீ செவிடாகவே போகலாம். ஆயினும் நான் ஒருபோதும் மவுனியாவதில்லை. நீ என் குரலுக்குப் பணியவேண்டிய ஒருநாள் கட்டாயமாக வரும். என்னை அலட்சியம் செய்வோர் எனக்குத் தவற முடியாது தீதுசெய்யும் பேதை மனிதரையும், பகுத்தறிவைப்பாவியாத பதர்களையும் உண்மை ஒளியிலே அம்பலப்படுத்திவிடுவேன். அதின்பின் மனவேதனை என்னும் அவியாத நெருப்பிலே அகப்பட்டுளரிய ஓயாது அரிக்கும் புழுவாக நானிருப்பேன், உன்னுடைய மனச்சாட்சி.

நான்—வேத சட்டத்தின் படியேதான் நான் எல்லாம் செய்து வருகிறேன். தீதையல்ல நல்லதையேசெய்து முடித்தேன். ஆகையால் நீ அமைதியாயிருக்க வேண்டும். அந்த யேசு தன்னைக் கடவுளின் மகன் என்று அவருக்குச் சமமாக்கினான். ஆண்டவரான கடவுளுக்கு எதிரியானான். சட்டப்படி அவனைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும். தேவதூஷணன் எவனும் உயிர் வாழப்படாது. அதோடு அவன் புதிய ஓர் அரசை அறிவித்து யூதகுலத்தின் அழிவுக்குக் குழி தோண்டினான். றோமை அதிகாரம் கிளர்ச்சி செய்வோரை நிர்மூலமாக்குவது நிசம். மக்கள் தவறும் படியாகவே அவனை ஆளுநன் பிலாத்துவிடம் ஒப்படைத்தோம். பிலாத்து அவனைச் சிலுவையில் அறையத் தீர்வையிட்டான். எனது கடமை முடிந்தது. சொன்னபடி மூன்றாம் நாள் எழும்புவானோவென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

குரல்—பகுத்தறிவைப் பாவிக்கப் பழகாத பேதை, அறியாமையால் அணாப்புண்டு அவலப்படுகிறாய். கடவுள் தந்த நியாயபுத்தி காரண காரியம் காட்டும் சக்தி. யேசுவைப்பற்றிய உண்மையை அறிய உனது ஊழியரையும் வேவுகாரரையும் அனுப்பி விசாரித்தாயல்லவா? நசரேத்தூர் யேசுவின் சொல்லையும், செயலையும் பற்றி நிறையத் தகவல் கிடைத்ததே. அவற்றிலேதாவது தவறு கண்டாயா? கடவுள் தந்த சட்டத்தை அவர் மாற்றவில்லை, நிறைவேற்றினார். உன்னைப் போன்ற பெருமையும், பொருளும், இன்பமும் தேடுகிற மனிதர் கட்டிவைத்த கட்டளைகளின் தப்பறையையே சுட்டிக் காட்டினார், மீறினார். எல்லாம் படைத்த கடவுளின் (எலோகிம்) முதலுரிமையை வற்புறுத்தினார். யாவையும் காக்கும் ஆண்டவனின் (யாவே) அரசை அறிவித்தார். இவை இரண்டும் தான் தெரியப்பட்ட சனத்தின் தலைவனான நீ செய்ய வேண்டிய வேலை. அதை அவர் செய்தார். நீயோ அவரைக் கொன்றாய். அது உனது குற்றம்.

நான்—மனிதனின் இயலாமையால் ஏற்படும் அறியாமை குற்றமானால் அதைத் தடுக்க எவரால் முடியும். அறியும் ஒளியையும் இயலும், பெலனையும் அளிக்கும் கடவுள் உனது முடிவை ஏற்பார் என நான் நம்பவில்லை. அறியாமையாலே தவறு செய்வதும், இயலாமையாலே கடமையிற் தவறுவதும் மனித இயல்பு, நல்ல ஆண்டவர் அவற்றைப் பாராட்டாது கட்டாயம் மன்னிப்பார்.

குரல்—அறியாமை இயலாமை என்ற இரண்டு ஆமைகளிற் காலூன்றிச் சறுக்குநடனமாடுவது மதிமங்கிய மனிதரின் சம்பிரதாயம். அது நியாயமல்ல குதர்க்கம். எது சரி எது பிழை என்பதை அறிய மனிதனுக்கும் போதிய புத்தியுண்டு. குறைவாலே ஐயமேற்படின் பெரியோரிடம் கேட்டறிவது கடமை. தன்னை அணாப்புவது மனித அறிவல்ல. கடமை செய்ய மனிதனுக்குப் போதிய பெலனுண்டு. குறை ஏற்படின் அயலாரின் உதவியை நாடுவது கடமை. எனக்கு எல்லாம் தெரியும் என்ற அகந்தை தன்னைக் கடவுள் என மதிக்கும் மதிகேடு. யாவையும் தனியச்செய்வேன் என்ற பேதைமை ஆண்டவன் அரசை எதிர்க்கும்யுக்தி, நீ அறிந்த மனித சரிதையில் இந்தக் கேலிநாடகம் நடந்துகொண்டே வருகிறது. ஆதாம் ஏவாள் கதை கற்பனையோ, புராணமோ, சரித்திரமோ என விவாதிக்கலாம். ஆனால் அது மனித பேதையின் நடைமுறையை அதிசயமான விதத்தில் விளக்குகிறது.

மனிதன் கடவுளோடு இருப்பதை விட்டு, அவரைப்போல

Chundikuli Branch Library



இருக்க ஆசைப்பட்டு அவரை ஆசனத்திலிருந்து கவிழ்த்து விட்டான். இது தன்னைக் கடவுளாக்கும் தேவதூசணம். கடவுள் காட்டிய வழியை விட்டுத்தன்வழியை தேர்ந்தது ஆண்டவன் அரசை மறுத்து மனித அரசைப் பிரகடனம் செய்வதாகும். இது இராசதுரோகம். இதனால் கடவுளை விட்டுப் பிரிந்தமனிதன் ஆன்ம உயிர் குன்றினான், நிர்வாணியானான், சுய அரசைநிறுவிப் பிரிவினை, பொய், களவு, கொலை, காமம் போன்றவை பெருகச் செய்தான்.

# செய்ததைப் பார்

அளித்தவர்: அம்பி

மனிதனின் சுதந்திரம் அருமையானது, ஆனால் ஆபத்தானது. சரியாகப் பாவித்தால் அதனாலே கடவுளைக் கைப்பற்றலாம். அதுவே நித்திய பாக்கியம். அதைப் பிழையாகப் பிரயோகித்தால் தனது கதியை இழக்கலாம் அதுவே நரகம். புத்தி, உண்மையை அறிவதற்கு, சித்தம் நன்மையைத், தெரிவதற்கு, இவை இரண்டும் கடவுளிலே ஒன்றிக்கின்றன. காரணமும் கதியுமான கடவுளை ஆராய்ந்து அறிவது தான் மனித அறிவு. அவனை விரும்பித் தெரிவது தான் மனித சுதந்திரம். அழியும் பொருட்களைத் தேடி அலைவது பகுத்தறிவுமில்லை, சுதந்தரமுமில்லை.

நான்—இவற்றை அறியாதது எனது குற்றமா?

குரல்—உரிமை கேட்பவன் கடமை செய்ய மறுப்பது குற்றம் தானே. உத்தியோகமில்லாதவன் தானும் பிழை செய்தால் நட்டமுண்டாகும். பலர் அதாலே பாதிக்கப்படுவர். சட்டம் அறிந்த உனக்கு இது தெரியாதா? அறியாமை, இயலாமையால் மனிதர் பல பிழைகள் செய்கிறார்கள். அதற்காக வேதாகமமும் பிறரும் உத்தரிக்கிறார்கள். இது நாளாந்த அனுபவமல்லவா? உன் அறியாமையாலே இயேசுவைக் கொன்றாய் என்றாலும் அந்தப் பிழைக்கு நீயே பொறுப்பாளி. அறியாமலா தீர்ப்பிட்டாய்? இயலாமலா றோமையரின் உதவியை நாடினாய்?

நான்—உன்னுடன் நான் வாதாடத் துணியவில்லை, என்னும் நான் செய்தது பிழையாகத் தோன்றவில்லை. சட்டம் அறியாத சபிக்கப்பட்டசனம் மெசியா, கடவுளின் மகன் என்று இயேசுவைப் பாராட்டினார்கள், திரளாகப் பின் பற்றினார்கள். மனிதனின் மகன் மனிதன் என்பது போலக் கடவுளின் மகன் கடவுள் என்று அர்த்தம் கொண்டார்கள். மேலும் மோசேசின் சட்டத்தையும், தேவனுடைய ஆலயத்தையும் தாக்கிப் பேசினது தவறில்லையா? மெசியா என்றால் தாவீதின் அரசைத் திரும்பவும் தாபிக்கும் தலைவன் என்பது மக்களின் எதிர்பார்ப்பு. றோமை அரசு இருக்குமட்டும் அப்படி ஒன்று சாத்தியப்படாது, அழிவுதானேற்படும். எனவே தான் நான் அவனைத் தொலைத்து விடுவது கடமையென்று கருதினேன்.

குரல்—கடமையென்று கருதினாய். ஆனால் இயேசு யாரென்றுநீ அறியவில்லையா? ஒலிவத் தோட்டத்திலே அவரைப் பிடிக்கச் சேவகர் மறவருடன் சென்றீர்களே. நசரேன் இயேசுவைத் தேடுகிறோம் என்றபோது அவர் நான்தான் என்றாரே. அப்போது பட்டாளம் திடுக்கிட்டுக் குடைசாயப் பின்னே நின்ற உங்களை வினாவினரே. அவருடைய சோதியை அப்போது காணவில்லையா? தனது வல்லமையைக் காட்டிய பின்னரல்லவா தன்னை உங்களிடம் விரும்பிக் கையளித்தார். கடவுள் வைத்த கண்ணியை நீங்கள் காணவில்லையா? பேதைகளே நீங்கள் உங்கள் சுதந்திர பெலத்தால் அவரைக் கைது செய்ததாகக் கருதினீர்களா? பின்னர் நீ நீதியாசனத்திலிருந்து வினவிய வேளை அவர் சொன்ன விடையை விளங்கினாயா? "நீ மெசியாவா? நீ கடவுளின் மகனா?" இவற்றை அவர் மறுக்கவில்லை, உண்மையென ஏற்றுக்கொண்டார். மேலும், "மனுமகன், கடவுளின் வல்லமையோடு மேகங்களில் வருவதைக் காண்பீர்கள்" என்றாரே. அவருடைய அதிசயமான பேச்சுக்கும், அற்புதமான செயலுக்கும் அதிலே விளக்கமிருப்பதைக் கண்டாயா? சீவியரான கடவுள் இந்த மகனிலே, இந்த மெசியாவிலே தனது மீட்பர் (யேசு) வேலையைச் செய்தார். அதனால் அவரும், கடவுளும் ஒன்று, எவரும் பிரிக்கமுடியாது அவரைக் காண்பவன் கடவுளைக் காண்கிறான். அவரைத் தொட்டவன் கடவுளைத் தொடுகிறான். (தொழுகிறான்) அவரைக் கொன்றவன் கடவுளைக் கொல்கிறான். பாவி, நீ செய்தது என்ன என்று புரிகிறதா?

நான்—ஐயோ, இதென்ன அநியாயம், இந்தப் பூமி வேண்டாம்.

குரல்—பொறு, பொறு, பதறாதே. மதிகெட்ட மனிதர் பாவ மன்னிப்படையக் கடவுள் திட்டிய திட்டமிதுதான். சுயாதீனத்தைப் பிழையாகப் பாவித்து மனிதர் கடவுளைத் தள்ளி விட்டு தங்கள் நாடகத்தை நடத்துகிறார்கள். அதின் பயன்தான் பிரிவினை, களவு, பொய், காமம், கொலை, நோவு, சாவு. இதுவே மனிதர் போற்றும் புகழும் வாரமும் வீரமும். ஆனால் மனிதரின் பைத்தியத்தால் கடவுள் தன் உரிமையை இழக்கவுமில்லைத் தனது திட்டத்தை மாற்றவுமில்லை, சில மனிதர் அவரை அறிந்து விரும்பி வாழ்ந்தனர், (வாழ்கின்றனர்). கடவுளின் ஆற்றலையும், அறிவையும், அன்பையும் ஏற்று மகிழ்ந்தனர் இது தான் கடவுளின் அரசு. ஆதிக்கதையிலே காணப்படும் மீட்பர் வந்தார். மனிதரை மீட்க மனிதரால் முடியாது. எனவே கடவுள் தானே வந்து தனக்கென ஒருமனிதனை உண்டாக்கி அவனிலே வாழ்ந்து பிழை (பாவம்) திருத்த (மன்னிக்க) வழி காட்டினார். யேசு (மீட்பர்) எனும் தனது பெயரை அவருக்களித்தார். தன் சொந்த மகன் என அறிவித்தார். தனது பிரதிநிதியாக அவரைப் பூசுதல் (கிறிஸ்து) செய்து சகலத்துக்கும் ஆண்டவராக (யாவே) நியமித்தார். இவர் மரியாளின் மகன். என அழைத்து மகிழ்ந்தார். கடவுளும் மனிதனும் ஒன்றான இந்த யேசு மனிதர் மீண்டும் கடவுளின் பிள்ளைகளாகும் வழியைக் காட்டினார். மாதிரிக்குடும்பம், மாதிரி இளைஞன், மாதிரித் தொழிலாளி, மாதிரி இறையடியான் இவையெல்லாம் கடவுள் யேசுவிலே, செய்து காட்டிய பாடங்கள்.

நான்—அப்படியானவரையா நாம் பிடித்து வதைத்துக் கொன்றோம்?

குரல்—அது மட்டுமல்ல. அதிலும் பயங்கரமான உண்மையொன்று உண்டு. அவரோடு நீ கடவுளைக் கொல்லத் துணிந்தாய், அதனால் உன் தலைமேலே உனது நீதித் தீர்ப்பை எழுதிக் கொண்டாய், கடவுளை வேண்டாம் என்ற தேவதூசணம் கடவுளின் அரசை வேண்டாமென்ற இராச துரோகம் இவையே மனிதர் செய்யும் பாவம், கடவுளைப் பொருளாகப் பெற்ற யேசுவும், அவரை அருளாகப் பெற்ற மரியாளும் மாத்திரமே இதற்கு விலக்கு. இதைத்திருத்த வந்த யேசு தன்னையேகுற்றவாளி போல உங்கள் தீர்ப்புக்குக் கையளித்தார். உன்னைப்போல உன் அயலானையும் நேசி எனக்கட்டளையிட்டகடவுள் உன்வாயாலே உனக்குத் தீர்ப்பளிக்க வைத்த பொறி இது என்று நீங்கள் அறியவில்லை. குற்றமில்லாத பாவி மனிதனுக்கு நீங்கள் சொன்ன தீர்ப்பு பாவிகளான நீதிமான்களெனும் உங்களுக்கு நீங்கள் கொடுத்ததீர்ப்பு. கையும் மெய்யுமாகப் படைத்தவனிடம் அகப்பட்டுக்கொண்டீர்கள். அவருக்கு உங்களாலியன்ற வாதை வேதனை, நிந்தை அவமானம், சரசம் பரிகாசம் எல்லாம் செய்து கொடூரமாகக் கொன்றீர்கள். இனி நீங்கள் என்ன சாட்டுச் சொல்ல முடியும்? கைப்பாஸ், பிலாத்து, ஏரோது, யூதாஸ் எல்லாரும் சேர்ந்து உன் இடமாகவே யேசுவைக் கொன்றார்கள். நீயிட்டதீர்ப்பை யேசு ஏற்றுக் கொண்டது போல நீ உன்தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். யேசுவைக் கொன்றாய், அவருள் இருந்த கடவுளைக் கொன்றாய், இது முடியாத காரியம், அதனால் உன்னையே கொன்றாய், காயின் சொன்னது போல் இனி எவரும் கண்டாயா? நீ முக் கொலைக் குற்றவாளி.

கடவுளைக் கொல்ல முடியாது. கிறிஸ்துவைக் கடவுள் சொன்னபடியே மூன்றாம் நாள் உயிர்ப்பிப்பார். கடவுளுக்கும், கிறிஸ்துவுக்கும், மரியாளுக்கும் மறு மொழி சொல்லக் குற்றவாளிக் கூண்டில் நீ நிற்கிறாய். உனது விடையாது?

இதோ மூன்றாம் நாளாயிற்று, யேசுக்கிறிஸ்து உயிர்த்து தன் உடலை மூடிய சீலையிலே பதித்து விட்டுப் போயிருக்கிறார். அந்தச் சீலை சொல்லும், இனி ஆறவோ உறங்கவோ உனக்கு அவகாசமில்லை. எழுந்து கல்லறைக்குப்போ, சீலையை எடுத்துக் கறைகளைப் படித்துப்பார். பகுத்தறிவு என்ன சொல்லுமோ அதைச்செய்....

# இரக்கமற்றவர்கள்

உயிர்ப்பு விழாவிற்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருந்தது. ஆலய வளவு துப்பரவு செய்வதிலும் பிரமாண்டமான அந்த ஆலயத்தை அலங்கரிப்பதிலும், அவ்வூர் மக்கள் முழுமூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குழுக்களும் தம்முடைய கடமைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். பாடகர் குழாமும் புதிய இன்னிசைக் கீதங்களை இசைப்பதற்கான ஒழுங்குகளை ஆரவாரமாகச் செய்துகொண்டிருந்தது.

''இந்த முறை ஈஸ்ரருக்கு நாங்கள் எல்லாரும் சாறிகட்டுவோம். அதுவும் ஒரேமாதிரி எடுத்தால்தான் சிறப்பாயிருக்கும். பூசை முடிந்த பிறகு சுவாமியை அழைத்து ஒரு பார்ட்டி வைக்க வேணும், அந்த ஞாபகத்திற்கு கொஞ்சம் போட்டோக்களும் எடுக்க வேணும்'' என்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இது எல்லோருக்கும் முடியுமா? இதெல்லாம் அவசியம் தானா என்று உணரமறந்துவிட்டார்கள்போலும். ஆனால் சுகிர்தா மட்டும் மறுப்புமில்லை, சம்மதமுமில்லை என்ற நிலையில் என்ன செய்வதென்றறியாமல் அவளின் மனம் பல கோணங்களிலும் சிதறத் தொடங்கியது. இம்முறை எல்லோரையும் போல் நானும் சாறி கட்டினால்தான் ஆண்டவர் ஏற்றுக்கொள்வாரா? இன்று எத்தனை குடும்பங்களில் நிம்மதி நிலவுகிறது? தாயிருந்தால் தகப்பனில்லை. தகப்பனிருந்தால் பிள்ளைகள் இல்லை. குடும்பமிருந்தால் வீடில்லை. எவ்வளவு இழப்புக்கள் எத்தனை அனாதைகள், அகதிகள். காலையுண்டால், மதியமில்லை மதியமுண்டால், இரவில்லை. ஒரு நேர உணவையென்றாலும் வயிறார உண்பதற்கு எத்தனை உள்ளங்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றது. இன்னும் எத்தனையோ பேர் உண விருந்தும் உண்ண முடியாத இன்றைய சூழ்நிலை. இந்த உணர்வு ஒரு சிறு துளியேனுமில்லாமல் இப்படியெல்லாம் கதைக்கிறார்களே! ச்சே! இவர்களுக்கு இரக்கம் என்பதேயில்லையா? என்று நொந்து கொண்டு அங்கிருந்து விலகிய சுகிர்தாவுக்கு மனக்கண்முன் அந்த ஞாயிறுவார சுப்புக்கிழவன்தான் தெரிந்தது.

பாவம் வழமைபோன்று ஞாயிறு பூசையில் பங்கு கொள்ளவும், வழமையான தனது உழைப்பை தேடிக் கொள்வதற்குமாக நீளமான தலைமுடி வளர்த்து கொண்டை முடித்துக் கொண்டு நரைத்து தொங்கிக் கொண்டிருந்த தாடியுடன் அழுக்குப் படிந்த கந்தலுடையுடன் ஒரு சாக்குப் பையை தோளில் போட்டுக்

சிறுகதை

கொண்டு பொல்லுத் தடியுடன் வந்திருந்தார், அந்த சுப்புக்கிழவன். அவர் முழுப் பூசையில் பங்குபற்றி தேவநற்கருணையில் பந்தியமரும் போது அருகில் இருப்பவர்கள் இழவனை முறைத்துப் பார்ப்பதும் முகத்தைச் சுழித்துக் கொண்டு பின்வாங்குவதும் வழக்கமாயிற்று.

சுப்புக் கிழவன் இளம் பராயத்திலிருந்து தன்னந்தனியனாக திருமணம் முடிக்காமல் இருந்தார். அவருடைய உழைப்பைச் சுரண்டிக்கொள்வதற்காக முன்னொருகாலத்தில் அவரை ஆதரித்தார்கள். அவரை வருத்தி முறித்துக் குடித்தபின் முதுமையின் இயலாமையை கண்டு நீ யாரோ? நான் யாரோ? என்று துரத்தி, கோவிலும், பஸ்தரிப்பு நிலையங்களும் ஆதரித்தன. தனது பிழைப்பைத் தேடிக்கொள்வதற்கும் பலியில் பங்கெடுப்பதற்கும் ஞாயிறுவாரம் தவறாமல்வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டாலே எல்லோருக்கும் ஒரு எரிச்சல். ஞாயிறு தப்பினாலும், இவன் தப்ப மாட்டான். போய்க் கிடப்பதற்கும் ஒரு அனாதைமடமும் கிடைக்கல்லையே! எவ்வளவு சனம் செத்துக்கொண்டிருக்கு. இந்தச் சனியனுக்கெண்டு ஒரு ஷெல் துண்டு இல்லையே. பூசைக்கு வாறதெண்டால் இவனுக்கென்று வேறையாக் காசு கட்டிவரணும் போல இருக்கு... த்தூ... சனியன் வாற போறவையலின்ர மானத்த வாங்குது என்று பொரிந்து தள்ளிக்கொண்டிருந்தார்கள்.

ஈஸ்ரர் பண்டிகைக்கு இன்னும் மூன்று தினங்கள் மட்டுமே இருந்தது. பாடற் பயிற்சி மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லோர் முகத்திலும் ஒரு குதூகலிப்பும், மகிழ்ச்சியும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆனால் சுகிர்தாவின் முகம் மட்டும் சற்று மாறுபாடாக இருந்தது. தன்னலம் மறந்து பிறர் நலம் கொண்ட அவள் ஏழைகளில் ஆண்டவரைக் கண்டுகொண்டிருந்தாள்.

அவளின் மனம் கண்டு... நின்ற ஏழைகளில் இன்றைக்கோ, நாளைக்கோவென்று கண்மூடப்போகும் அந்த தள்ளாத வயதையும் தாண்டிவிட்ட சுப்புக்கிழவனின் உருவம் மீண்டுமொருமுறை நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தது.

இந்த ஈஸ்ரர் பண்டிகைக்கு நான் கடன்பட்டு புதுச்சேலையணிந்து தடல் புடலாக உறவினர்களுக்கு விருந்து படைத்து விட்டால் மட்டும் நான் ஆண்டவரைக் கண்டு விடுவேனா என்ற கேள்விக் குறி அவளைப் பல திசைகளுக்கு திருப்பிச் சென்றது. அவளுடைய நண்பிகளெல்லாம்

ச. பிரபாகரன்
முதலைகுத்தி, உயிலங்குளம்.

''என்னடி சுகி! நீ ஒரு மாதிரியாய் இருக்கிறாய். நீ ரெடியில்லப் போல இருக்கு. ஏதோ எங்களோட சேர்ந்து ஒத்துழைச்சிரு. வருஷத்தில ஒரு முறை வந்த ஈஸ்ரர் பண்டிகையை சிறப்பாகத்தான் செய்ய வேணும். அதுவும்நாங்கள்பாடகர்குழாம் சனங்களெல்லாம் எங்களைத்தான் நோட்பண்ணுவினம். நாங்கள் எல்லாம் எப்பவோ ரெடியாகிட்டோம். எங்கட முகத்தில கரியைப்பூசி 'மூட்' ஐ குழப்பிப் போடாத'' என்று பெரிய பிரசங்கமே செய்துவிட்டார்கள். சுகியும் "Yes, I am Ready" என்றவாறு அங்கிருந்து விலகிச் செல்கின்றாள். ஆனால் அவள் உடையையல்ல, உள்ளத்தைத்தான் ஆயத்தப்படுத்தினாள்.

வீடு சென்ற சுகி ''நாளைக்கு ஈஸ்டர் பண்டிகை. கிறிஸ்து யேசு என் உள்ளத்தில் உதிப்பதற்கு நான் இன்னும் செய்ய வேண்டியது என்ன'' என்று தன்னை கேள்விமேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்த போது ஒரு நல்ல யோசனை பிறந்தது. அதை நிறைவேற்றி விடவேண்டுமென்று ஆவல்கொண்டு தான் நீண்டகாலமாக சேமித்து வைத்திருந்த சிறு தொகைப் பணத்தையும் எடுத்துக்கொண்டு நேரே புடவைக்கடைக்குச் சென்று ஒரு வேட்டியும், சேட்டும் வாங்கிக்கொண்டு வீடு திரும்புகின்றாள். சரி, அந்த அப்புவை எங்கே கண்டுபிடிப்பது என்று யோசித்துக் கொண்டு சென்றவளுக்கு கும்பிடச் சென்ற தெய்வம் குறுக்கே வந்தது போல், சுப்புக் கிழவனும் குறுக்கே வந்துகொண்டிருந்தது தெரிந்தது. அவரைக் கண்ட சுகி ''எங்கனை அப்பு போட்டு வாறநீ?'' என்று கேட்க ''நாளைக்கு உயிர்ப்பு விழா பூசையல்லோ! அதுதான் ஆண்டவரை முழுமையாகப் பெறுவதற்கு சுவாமிட்ட கொம்பிசாரிச்சுப் போட்டு வாறன் பிள்ள ''என்று பொக்கை வாயைத் திறந்து கூறினார். ''சரி, சரி நேரம் போகுது இந்தா பிடி. இதுக்க வேட்டியும், சேட்டும் இருக்கு. நாளைக்கு கோவிலுக்கு வரேக்க உடுத்தியெண்டு வா என்று அவரிடம் கொடுக்க அவரும் ஒரு கும்பிடு போட்டு விட்டு மகிழ்ச்சி தழுவ அந்த உடுப்புப் பொட்டலத்தை வாங்கி கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு வேகமாக நடந்து செல்லும் போதே அவரின் முகத்தில் ஆண்டவர் யேசுவைக் கண்டு விட்டாள் சுகிர்தா.

பொழுது விடிந்ததும் ஈஸ்ரர் பண்டிகை, ஆலயத்தில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. சுகி வீட்டுக்கடமைகளை முடித்து விட்டு கழுவி மினுக்கி வைத்திருந்த வழமையாக அணியும் சட்டையை அணிந்து கொண்டு கோவிலுக்குள் செல்கின்றாள். அவளைக்கண்ட நண்பிகளின் முகம் வாடிச் சோர்ந்து விட்டது. ''என்னடி சுகி! நீ இப்படிக் கடைசி நேரத்தில கழுத்தறுப்பாயெண்டு நாங்கள் நினைக்கேல்ல, அந்தா பாரும்! எல்லாரும் எங்களைத்தான் பார்த்துக் கொண்டு நிக்கினம். ச்...சே! நீ இப்ப எங்கட மூட் எல்லாம் குழப்பிப் போட்டாய் ''என்று

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கம் நடத்தும்

# தவக்காலக் கல்வித் திட்டங்கள்

1988 - மானிட உயிரின் மாண்பினை மதி — அன்றேல் அழிவே எமது கதி
1989 - சமாதானத்தை நிலைநாட்ட நீதிக்காக உழைப்போம்

**1990 - சிந்தனை:**

## நீதியைக் கடைப்பிடிப்போம் மானிட உயிரைப் பேணுவோம்

இவை சம்மந்தமான ✯ குழு சிந்தனைகள் ✯ கைநூல்கள் ✯ சுவரொட்டிகளை

உங்கள் மறைவட்ட சமூக முன்னேற்ற நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பங்கின் அல்லது சமூகத்தின் சிறு சிறுகுழுக்கள் மத்தியில் மேற்கூறிய உதவி நூல்களைக் கொண்டு



- ▲ குழுத் தியானங்கள் / கலந்துரையாடல்கள்
- ▲ குழு நடவடிக்கைகளுக்கும் செபத்துக்கும் வழிகாட்டும் பொதுத் தீர்மானத்துக்கும் ஊக்கப்படுத்துங்கள்.

இத் தவக் காலத்திட்டத்துக்கான உங்கள் பங்களிப்புக்கு எமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள சிறுநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், செய்தித்தாள்கள் ஆகியன மூலம் எமது சக்திக்குட்பட்டவரை முயற்சித்தோம்.

என்றாலும் இச் சிந்தனைகள் அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

எம் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படவும் இச் செய்தியை எடுத்துச் செல்லவும் நாம் சிறுகுழுக்களாகக் கூடுவோம். 1990ஆம் ஆண்டுத் தவக்காலத் திட்டத்துக்கான உங்கள் விமர்சனங்களையும் கருத்துக்களையும் மதிக்கும் அதே வேளையில் 1991ஆம் ஆண்டுக்கான உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம்.

இலங்கையில் இன்று நீதி அவசரத் தேவையாகும் —
சிறுபான்மை இனங்களின் குறைபாடுகளுக்கு, பெரும்பான்மையினரின் நியாயமான கோரிக்கைகளுக்கு நீதி, ஏழைகள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஆகியோருக்கு பொருளாதார நீதி ஆகியன அவசரத் தேவையாகும்.

---

## மானிட உயிரை அழிக்க எவருக்கும் உரிமை கிடையாது

---


அருட் திரு. ம. இ. பயஸ்
மனித முன்னேற்ற நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

பிதா யோண் கமிலஸ் பெர்ணான்டோ,
இயக்குனர்,
சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம்,
133. கின்சி வீதி, பொரளை, கொழும்பு - 08

Chundikuli Branch Library

# நீதியைக் கடைப்பிடியுங்கள்
# மானிட உயிரைப் பேணுங்கள்

Chundikuli Branch Library

# கல்லறை முடிவல்ல.... தொடர்கதை



உயிரிழப்புகளும், மரணங்களும், மடிவுகளும் வாழ்வின் தவிர்க்க முடியாத நியதிகள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மைதான். கண்ணீரும், கவலையும், கம்பலையும் மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட நிகழ்வுகள் தான். ஆனால் இவைதான் வாழ்வின் இலக்கை, திசையை நிர்ணயிப்பவை என்று சொன்னால் ஒரு கிறிஸ்தவனால் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும். இயேசுவின் கல்வாரிப்பயணமும் அதன் விளைவான மரணமும் கல்லறையோடு முடிந்துவிட்ட நிகழ்வல்ல. நீதிக்கும், உண்மைக்கும், அன்பிற்கும் தர்மத்திற்கும் சவால்விட்ட ஒரு சமுதாயத்தையே எதிர்த்து நின்று போராடிய தனிமனிதனின் இலட்சியப் பயணத்தின் பரிசு மரணமாகவிருந்தாலும் இயேசு நிலைநாட்டப் போராடிய மானிட மதிப்பீடுகள் கல்லறைக்குள் மரணிக்கவில்லை. சாவைவென்ற சத்தியனாக உரைத்தவாறே உயிர்த்த யேசுவின் சாவு கல்லறைக்கு அப்பால் நின்று நோக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

இன்று மனிதர்கள் வரலாறுகள் கற்றுத்தரும் பாடங்களை இலகுவில் மறந்துவிடுகின்றார்கள். யேசுவின் உயிர்ப்பினூடாக துளிர்விடும் நம்பிக்கைக் கீற்றுக்கள் பட்டமரமாக,பாலைவனமாக,வெற்றுக் கல்லறைகளாக வாழுகின்ற மனங்கள் ஒவ்வொன்றிற்கும் வலிமை கொடுக்கவேண்டும். சுயநலக் கல்லறைக்குள்ளும் 'நான்' என்ற கோட்டை மதிற்சுவர்களுக்குள்ளும் வாழும் ஜீவன்களுக்குயேசுவின் உயிர்ப்பு நிச்சயம் சவால் விடுக்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும். இன்று கிறிஸ்தவத்தை நிறுவனமயமாக்கி வெறும் சடங்குகளையும், அனுட்டானங்களையும் கிறிஸ்தவம் என்னும் அமைப்பு கல்லறைக்குள் அடக்கம் செய்து கொண்டிருக்கும்வரை யேசுவின் உயிர்ப்பு அர்த்தமற்ற நிகழ்வாகவே மாறிவிடும். சடங்குகளும், சம்பிரதாயங்களும், சட்டங்களும் மனித மாண்பையும், மனித நேயத்தையும் வளர்க்காத வரைக்கும் அவையும் கல்லறைக் குழிக்குள் அடக்கம் செய்யப்படவேண்டியவையே. ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கைப் பயணத்தின் நியதி கண்ணீரும், கவலையும், துயரமும் நிறைந்த ஒரு சோக நிகழ்வல்ல. மாறாக இயேசுவின் உயிர்ப்பு மீட்புப் பயணத்தில் தொடரும் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விற்கும் எமக்கு அர்த்தம் கொடுக்கின்றது. கல்லறை ஒரு கிறிஸ்தவனின் வாழ்விற்கு கடைசிக்களமல்ல. வாழ்க்கைக்களத்தில் போராடிய ஒரு கிறிஸ்தவனுடைய ஜனனம் உயிர்ப்பில் தான் ஆரம்பிக்கின்றது. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளக் கல்லறைக்குள் புதையுண்டு கிடக்கும் சுயநல உணர்வுகள், பாவச்சார்புகள், வரம்பில்லா ஆசைகள் அடியோடு அழிந்து உருத்தெரியாமல் போகாத வரைக்கும் யேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்ள முடியாது. இன்றும் எம்முடன் வாழும், எமக்கு வலிமைதரும் மரணத்தை வென்ற மாவீரன் யேசுவின் உயிர்ப்பு எம் ஒவ்வொருவருடைய புதிய ஜனனத்திற்கும் வழி அமைக்கட்டும்.

— றோகான் ஸ்ரனி அன்ரனி
உயிலூர்

## உயிர்ப்பின் நினைவலைகள்

அந்த இரவு
மானிட மரணத்தையெல்லாம்
தோற்கடித்த இரவு.
மலையிலிருந்து
பாய்ந்து வந்த நதி கூட
அன்று திரும்பிச் சென்றது.
பூமி நடக்கமுற்று
பேரொலி எழுப்பியது
மேகங்கள் முட்டி மோதி
முழக்கமிட்டன.
ஆறடி நிலமண்ணும்
அவனை அணைக்க
மறுத்து விட்டது
ஆம்.
மண்ணைக் கிழித்து எழுந்து
அவன் விண்ணைத் தொட்ட
அந்த இரவு
மானிட மரணத்தையெல்லாம்
தோற்கடித்த இரவு.
வானமும் பூமியும்
அன்று
கை குலுக்கிக் கொண்டன.
கூற்றுவன்
என்று சொல்லப்பட்டவன்
அன்று தூக்கிலிடப்பட்டான்.
"கொன்று விட்டோம்.
அவனை
மண் தின்று விட்டது"
என்றவர்கள்
அதைக்
கட்டுக்கதையென
மட்டம் தட்டினர்.
வரலாற்றுப் பக்கங்கள்
அதைப் பதிவு செய்ய
நிராகரித்த போது
ஆட்சியாளர் முன்
சாட்சியானார்கள்
அவர் சீடர்.
"உடலின் மடிவுதான்
வாழ்வின் மடிவு"
என்ற நம்பிக்கை
பொய்யாக்கப்பட்ட
அந்த இரவு
மானிட மரணத்தையெல்லாம்
தோற்கடித்த இரவு.

— தமிழ்நேசன்.

## சுன்னாகம் ஏழாலைப் பங்கில் பொது அமர்வு

குழுக்களின் பொது அமர்வு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் சென்றமாதம் நடைபெற்றது

பங்குத்தந்தை த து தலைமை உரையில் சிறுவர்களின் மறை அறிவை வளர்க்க, மறை ஆசிரியர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனவும், ஞாயிறு கடன் திருநாள் வழிபாட்டு முன்னுரை, வாசக முன்னுரை, மன்றாட்டுக்கள் நேரகாலத்துடன் பங்குத்தந்தைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் புனித சின்னப்பர் கூறியபடி எமது விசுவாசத்தின் உச்சகட்டமான உயிர்ப்பு விழாவை கலைநிகழ்ச்சியுடன் நடாத்துவது எனவும் கூறி அங்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## மனிதன் + மரணம் = அமைதி

கதிரவன் விழித்துவிட்டான். ஒளிக்கதிர்கள் உலகை மெல்லமெல்ல தழுவிக்கொள்கின்றன. வாழ்வின் நடுப்பகுதியிலே புதியதொரு அத்தியாயம் ஆரம்பமாகின்றது. அத்தியாய ஆரம்பங்கள் அன்பை அடியாகக்கொண்டு தொடங்குகின்றன. ஒவ்வொரு மனித உள்ளத்திலும் எதிர்பார்ப்பின் ஏக்கங்கள். அவ்வேக்கங்கள் குறைய கல்லறை ஒன்று பிளந்து வல்லமை உள்ள தேவன் வாழ்வினை வென்று எழுகின்றார்.

ஒவ்வொரு வருடமும் இதை ஒரு திருநாளாக நினைவு கூருகின்றோம். வெறும் நினைவுகளாவே இவை இருந்துவிடுகின்றன. மனித வாழ்வின் நிஜங்களில் இதைக்காணுவது அரிதாகி விட்டது. உயிர்த்து விட வேண்டும் மனிதன்- தன்னலத்தில், பொறாமையில், பணப்பித்தில், வஞ்சக எண்ணங்களில் இன்னும் எத்தனையோ அழிவுகளினின்று மனிதன் உயிர்க்கவேண்டி உள்ளது. மற்றவனின் ஆற்றல்களை வளராமல் தடைசெய்யும் போதும் அடுத்தவனின் வாழ்வினுக்கு வீழ்ச்சியை உண்டு பண்ணும் போதும் இன்று எத்தனையோ சிலுவைகள் தமது உடலை இரத்தத்தினால் சிகப்பாக்கிக் கொள்கின்றன. தனது இரத்தத்தையும், சிலுவையையும் இணைத்ததன் மூலமாக இயேசு மீட்பினைக்காட்டி வைத்தார். மனித விழிகள் அடிக்கடி நனைகின்றன. சுயநலச்சேற்றினின்று விடுபட்டுவிடுவேனோ என்ற வித்தியாசமான எதிர்பார்ப்பு. நெருப்புக்குள் இருந்துகொண்டு நீரைத்தேடினால் மனிதன் பிழைக்க முடியுமா? உலகப்போக்குகளான கொலை, கொள்ளை, வஞ்சகம், சூது. எரிச்சல், சிற்றின்பப் போக்குகள் இவற்றினுள் அமர்ந்திருந்து கொண்டே ஒரு நிரந்தர சமாதானத்தை தேடி அலைவது பைத்தியக்காரத்தனம். இருளுக்காக உழைத்துக்கொண்டு ஒளியை எதிர்பார்ப்பது அறிவீனம். நிட்சயமாக மனிதன் அமைதியைக் காண்பது அவன் எதிர்காலத்தில் உறங்கப்போகும் கல்லறைக்குள்தான். அதுதான் அவனை நிம்மதியடையச் செய்யும் உறைவிடம்.

D. E. ரட்ணராஜ்
இளவாலை

## இளைஞர்களே திரண்டு வாரீர் !

இளைஞர்களே ! திரண்டு வாரீர் !
சீதனத்தைச் சிறையிலடைத்திட
சிறுத்தை போல் சீறிப்பாய்ந்து வரும்
சீதனத்தை சிதைத்தளித்திட
இளைஞர்களே ! திரண்டு வாரீர் !

எம்மினத்தை எம்மினத்தால் அழிக்கும்
சீர்கெட்ட இனமாம் சீதனத்தை அழித்திட
தீவிர சிந்தையுடையோரே வாரீர் !
எம்மினம் காக்க அகற்றிடுவோம் சீதனத்தை
இளைஞர்களே ! திரண்டு வாரீர் !

ஆணினத்தை விலை பேசும் சீதனஅரக்கனை
விரட்டியடித்திட வாரீர் ! அந்த
ஆணிவேரை அறுத்தெறியும் ஆவலுடன்
அடிமைப்படுத்தும் சீர்கெட்ட இனத்தை அகற்றிட
இளைஞர்களே ! திரண்டு வாரீர் !

எம் பெண்ணினத்தின் அழுகுரலை அகற்றிட வாரீர் !
அவள் மனதினில் சுவாலை விட்டெரியும்
தீக்கொழுந்து தனை அணைத்திட
சீற்றம் கொண்டெழும்
இளைஞர்களே ! திரண்டு வாரீர் !

சீறிப்பாயும் சிங்கக் குட்டிகளே !
தன்மானம் கொண்ட தங்கக் கட்டிகளே!
நேரம் வந்துவிட்டது சீக்கிரம் எழுந்திடுவீர்!
சீரழியும் எம் பெண்ணினத்தை வாழ்விக்க
இளைஞர்களே ! திரண்டு வாரீர் !

ஆக்கம்: ச. பிரபாகரன்
முதலைகுத்தி,
உயிலங்குளம்.

## மீட்பரின் பாதுகாவலர்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

''பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதும் அதற்கு உட்பட்டதுமான ஆண் குழந்தைகளையெல்லாம் கொன்றான்'' (மத்.2:16) அவைகளையெல்லாம் கொல்வதன் மூலம் புதிதாகப்பிறந்திருப்பதாக அறிந்த ''யூதர்களின் அரசரைக்'' கொல்ல எண்ணினான். ஆகவே, கனவிலே எச்சரிக்கப்பட்ட சூசை ''பிள்ளையையும், தாயையும் இரவிலேயே கூட்டிக்கொண்டு எகிப்துக்குச் சென்றார், ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தார். இவ்வாறு எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்'' என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் கூறியது நிறைவேற வேண்டியிருந்தது. (மத். 2:14-15 ஒசி. 11:1) ஆகவே, இயேசு பெத்லகேமிலிருந்து நசரேத்துக்குச் செல்லும் வழி எகிப்தினூடாக அமைந்தது. பழைய உடன்படிக்கையை ஆரம்பிப்பதற்கு இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு விடுதலைப் பாதையில் சென்றது போலவே, இறைபராமரிப்பு என்னும் மறைபொருளின் பாதுகாவலரும், ஒத்துழைப்பாளருமான சூசையும் நாடிமுந்த நிலையிலும் புதிய உடன்படிக்கையைக் கொண்டுவருபவரைப் பாதுகாத்து வந்தார்.

## பண்டிவிரிச்சானில்

''சிறு வயதில் இருந்தே செபம், தபம், ஒறுத்தல், அன்பு, பகிர்தல் ஆகிய யேசுவின் நல்ல பண்புகளை வாழ்ந்து அவர் பாதை செல்ல வேண்டும்'' இவ்வாறு திருப்பாலத்துவசபை இயக்குனரான அருட்தந்தை சூசைப்பிள்ளை அடிகள் மாசி மாதம் 23 ஆம் திகதி மாலை 6 மணிக்கு பெரிய பண்டிவிரிச்சான் புனித மரியகொறற்றி ஆலயத்தில் சபை ஒன்றிப்பு விழாவில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

விழாவில் பங்குத்தந்தை தேவசகாயம்பிள்ளை அடிகளாரும், அருட்செல்வி அருள் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நற்கருணை ஆசீரின் பின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றது. மறுநாள் காலைத் திருப்பலியில் பாலகர்கள் ஒவ்வொருவரும் தமது அர்ப்பணத்தின் சின்னமாக, ஒவ்வொரு மலரைக் காணிக்கையாக்கினர்.

## இரக்கமற்ற....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொரிந்து தள்ளிக்கொண்டிருக்க அவள்மேல் இரக்கம் கொண்ட மரிஸ்ரெலா ''வெந்த புண்ணில வேலைப் பாச்சாம சும்மா இருங்கோ பாப்பம். சுகி என்ன செய்வா? அவள் பாவம் தாயில்லாதவள். மூன்று தங்கைக்கும் அவள்தான் தாயாக இருக்கின்றாள். தகப்பன்ர உழைப்பும் போதாது. இதுகளெல்லாம் தெரிஞ்சு கொண்ட பிறகும்... ச்சே! இப்படி இரக்கமில்லாமல் கதைக்கிறீங்க'' என்று பதிலடி கொடுத்தாள்.

திருப்பலி பக்திப்பரவசத்துடன் நடந்துகொண்டிருந்தது. எல்லோரும் திடீரென பின்பக்கம் திரும்பிப் பார்த்து திகைத்து நின்றார்கள். வெண்ணாடை தரித்த கட்புக்கிழவன் தனது வழமையான இருப்பிடத்திற்கு வந்து அமர்ந்தார். அவர் வெண்ணாடைக்கோலத்துடன் வந்திருப்பதைச் சிந்திகக முடியாதவர்கள் இந்தக் கிழவனை யார் மாப்பிள்ளை வேஷம் போட்டனுப்பியது'' என்று ஊ த்த ஒருவாறு சுகிர்தாவுடைய வேலைதான் என்றும் தெரிந்துகொண்டனர்.

முதல் நாள நல்ல பா சங்கீர்த்தனம் செய்துகொண்டு நற்கருணைவிருந்துற்கும் பந்தியமர்ந்தார். பூசைமுடிந்து எல்லோரும் வாழ்த்துக்கள் தெரிவித்தும் உயிர்த்த யேசுவை ஆராதிப்பதிலும், மெழுகுதிரி கட்டுக்கள் அடுக்கி கொழுத்துவதிலும் ஈடுபட்டார்கள். சனக்கூட்டத்தின் மத்தியிலும் சுப்புக்கிழவன் தனது மூட்டை முடிச்சுக்களை மூலையில் வைத்து விட்டு உயிர்த்த ஆண்டவரை ஆராதனை செய்யச் செல்கின்றார். செல்லமுடியாமல் நெரிசல்பட்டு பின்பக்க மண்டை அடிபட விழுந்து விட்டார். மண்டை பிளந்து இரத்தம் ஆறாகப் பெருகி வெண்ணாடை இரத்தம் தோய்ந்த ஆடையாக மாறுகின்றது. அங்கே நின்றவர்கள் ஐயோ! பாவம் கிழவனுக்கு நல்லா அடிபட்டு விட்டது என்று சொல்லிக்கொண்டிருக்க சுகிர்தா ஓடிவந்து கிழவனைத் தூக்கி நிமிர்த்தி தலைக்குக் கட்டுப்போட்டுக் கொண்டு அவசர அவசரமாகப் பங்குத்தந்தையின் உதவியுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நேரமும் சரியாக இருந்தது. சுகிர்தாவின் வீரச்செயலை அங்கு குழுமிநின்ற அந்த இரக்கமற்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

(நிஜமும் நிகழ்வும்)

## அமைதியின் பாதையிலே...

வானகத்தே தவழுகின்ற முகிலைக் கண்டேன்.
வண்ண மயில் தோகையின் அழகைக் கண்டேன்.
கானகத்தே பறவைகளின் குரலைக் கேட்டேன்.
கவின் பெறு மலையில் பனியைப் பார்த்தேன்.
என்னகத்தே அமைதி உலவக் காணேன் ?......
ஏனென்று கேட்கும் விடையைக் காணேன் !
தன்னகத்தே அமைதி தேடித் தமிழன்
தர்மம் நீதி நியாயம் கேட்டலைவதேனோ ?

★

அன்பும், பண்பும் அமைதியின் கரங்களாகும்,
அரவணைக்கும் கருணையின் வரங்களாகும்.
என்பும், குருதியும் ஈகையின் பலங்களாகும்,
எவரிடத்தும் சாந்தி தரும் தலங்களாகும்,
வன்முறையோ வாழ்வின் துயர்களாகும்,
வளிமுறையில் உண்டாகும் தடைகளாகும்.
இந்நிலை மாற்றுப் தயம் கொள்வோம்,
எவரிடமும் சாந்தி நிலவக் காண்போம்.

★

அமைதியின் பாதையிலே அழிவு தோற்கும்,
அகிலத்தே அன்பு நின்று வெல்லும்,
மமதையின் வேதங்கள் மடிந்தே போகும்,
மானிட தர்மங்கள் நிலைத்தே வாழும்.
உமது—எமது என்ற பேதம் நீங்கும்,
உள்ளவை எல்லாமே பொதுவாய்த் தோன்றும்,
சமதர்ம சமுதாய விழிப்புக் காண்போம்,
சன்மார்க்க நெறிகளின் உயிர்ப்பைக் காண்போம்.

ப. ஞானராஜ்,
மடு அன்னையின் சிறிய குருமடம்,
மன்னார்.

## ஓவியப் போட்டி—15

### "யேசுவின் விண்ணேற்றம்"

இக்காட்சியை 30 C. M×25 C. M. ஓவியமாக வரைந்து 10-5-90ற்கு முன் "பாதுகாவலன்" அ. பெ. இல. 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் சிந்தனா சக்தியையும், ஓவியத்திறமையையும் வெளிப்படுத்தும் விதத்தில் இப்போட்டியில் பங்கு பற்றுங்கள்.

பரிசு ரூபா 25/-

போட்டி 14இன் முடிவுகள்:

1ஆம் பரிசு; செல்வி. அருளானந்தம் றோசாஜினி, 107/3, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

2ஆம் பரிசு; அருளானந்தம் டினேஸ் ராஜ், 107/3, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு: கோ. றுபினா, 13, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

பரிசு பெறும் ஓவியம் அடுத்த இதழில்

## மன்னார் லசேலியன் அபிவிருத்தி நிலையம்

### அகில உலக கெயர் மரவேலை கட்டுவேலை பயற்சிகள்

தேசிய நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிலையத்தின் (ICTAD) தொடர்புடன் அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் இணைத்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும் பயிற்சித்தகமை:- 2½ மாதம் ஸ்தாபனப் பயிற்சி. 10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி.

கொடுப்பனவு— ஸ்தாபனப் பயிற்சியின்போது மாதம் ரூபா 600/- ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படும். வெளி இடங்களில் இருந்து வருவோர்க்கு இலவச உணவு தங்கல் வசதி பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளம் வழங்கப்படும். இலவச உபகரணப்பொதி வழங்கப்படும்.

சான்றிதழ்கள்:— பயிற்சி நிலையப்பயிற்சிச் சான்றிதழ் தொழிற் பரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிதழ் சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபனச் சான்றிதழ்.

இதர உதவிகள்:— பயிற்சி முடித்தவர்கள் சொந்தத்தில் முயற்சிகளைத் தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழி வகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள்:— நிர்வாக இயக்குனர், லசேலியன் அபிவிருத்தி நிலையம், மன்னார் என்ற முகவரிக்கு 22-4-90 க்குப் பிந்தாமல் கிடைக்க கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

சகோ. செல்வதாஸ்
நிர்வாக இயக்குனர்.

## நல்ல நண்பர்கள்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கொஞ்சக் காலத்திற்கு அதை நீ நட்பாகக் கருதக்கூடாது. வெறும் பழக்கமாகத்தான்.

★ உனக்குக் கஷ்டம் வந்தபோது அவன் கை கொடுத்தால், உன்னைப்பற்றி நல்லவிதமாக, நீஇல்லாத இடத்தில் அவன் பேசுவதைக் கேள்விப்பட்டால், பிறர் உன்னைப்பற்றித் தவறாகப் பேசும்போது அவன் தடுத்துப் பேசியதாக அறிந்தால் அவனை நீ நம்பத் தொடங்கு.

★ நட்பு என்பது வெறும் முகஸ்துதி அல்ல, ஆபத்தில் உதவுவது ஒன்றே நட்பு. நீ அழும்போது உண்மையிலேயே அவனுக்கும் அழுகை வருகிறது என்றால் அதுதான் நட்பு.

★ நல்ல மனைவியை எப்படி இறைவன் அருளுகின்றானோ அப்படியே நல்ல நண்பர்களையும் அருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்பது நல்லது.

M. ஜோண் பற்றிக்
சுன்னாகம்.

## மனநோயைத் தவிர்க்க மகத்தான மருந்து

நாளுக்கு நாள் பாவசங்கீர்த்தனத்தை நல்ல பலனோடு பயன்படுத்துபவருடைய எண்ணிக்கை குறைந்து வருவது போல் தோன்றுகிறது. இவ்வொப்புரவு அருட்சாதனத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்று சிந்திப்பது நல்லது.

"மனநோயால் வருந்துகிறவர்களின் பெரும்பான்மையினரின் உள்ளத்தின் நிலையை ஆராய்ச்சி செய்தால் அவர்கள் தங்கள் ஆன்ம ஆழத்தில் கடவுளைத் தேடியவர்கள் என்றே முடிவு செய்யவேண்டும். தேடின கடவுள் தங்களைக் கைவிட்டதாக எண்ணியதாலோ, கண்ட கடவுளைக் கைவிட்டதாலோ தேடித் தேடிக் கடவுளே இல்லை என்று முடிவு கட்டியதாலோ அல்லது கண்டு கொண்ட கடவுளை நம்ப மனவுறுதியற்றதனாலோ மனநோயுற்றுள்ளனர் என்று கூறவேண்டும்.

"இவர்கள் தக்க காலத்தில் தங்கள் உள்ளத்தைத் திறந்து கத்தோலிக்கர் செய்வது போல் பாவசங்கீர்த்தனம் செய்திருந்தால் மனநோயுற்றிருக்கும் வாய்ப்புக் குறைந்திருக்கும்" என்று மனோ தத்துவ நிபுணர் டாக்டர் கிரோய் கூறுகிறார். இங்கு இத்திருவருட்சாதனம் நோய்க்கு மருந்தாக அல்ல, நோய் வருமுன்பே நோய்த் தடுப்பு சத்துணவாகப் பயன்படுவதைக் காண்கிறோம்.

## சுன்னாகம்......

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தவர்களின் கருத்துக்களையும் கேட்டார். கூட்டம் வருடத்தில் மூன்று தடவை கூடுவது என்றும் இதற்கான நிர்வாகத்தை தெரியுமாறும் பங்குத்தந்தை பணித்தார்.

ஜேம்ஸ் மரியநாதன்
சுன்னாகம்

### நன்றி நவிலல்

எம் அருமைத் தந்தை வஸ்தியாம்பிள்ளை சின்னத்துரை என்பவரின் திருநாடலங்கரித்த தினத்தன்று வருகை தந்து அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இரந்து, எம் ஆழ்ந்த அனுதாபங்களிற் கலந்த அனைவரையும் இதயக் கனிவுடன் நினைந்து நன்றிகூறுகின்றோம்.

மேதகு யாழ் ஆயர் அவர்கள் குருக்கள், கன்னியர், உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட வகையில் நன்றி நவில முடியாத நிலையில் பிரசுர வாயிலாக நன்றிகூறி எமது கடப்பாட்டைப் பணிவன்புடன் தெரிவிக்கின்றோம்.

இறைமகன் கிறிஸ்துவின் நிறை அருள் உங்கள் ஒவ்வொருவர் மீதும் நிழலிடப் பிராத்திக்கின்றோம்.

மனங்கனிந்த நன்றியுடன்
மனைவி
மக்கள்
S. மரிய கொறற்றி

### முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



செல்வி
லீலாவதி சுப்பிரமணியம்
(ஆசிரியை)
மண்ணில் 04-4-31
விண்ணில் 17-4-89

"பலரை நல்வழியில் திருப்பியவர்கள், விண்மீன்களைப் போல் என்றென்றும், முடிவில்லாக்காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்."
தானி. 11:3

அம்மா! எமது உள்ளக் கோவிலில் குடியிருக்கும் தெய்வத்துடன் நீயும் இருக்கின்றாய் என்பதில் சாந்தி அடைகின்றோம்.

புங்குடுதீவு 2, சகோதர, சகோதரிகள், குடும்பத்தினர்.

## பரிசுத்தவார திருவழிபாடுகள்—1990

### யாழ். புனித மரியன்னை பேராலயம்

குருத்தோலை ஞாயிறு: 08—04—90.
காலை 5-30 திருப்பலி.
6-30 குருத்தோலை மந்திரிப்பு; பவனி.
ஆயரின் கூட்டுத் திருப்பலி.
,, 8-00 திருப்பலி.
மாலை 5-30 திருப்பலி.
பரிசுத்த வாரத்தின் திங்கள்: 09-04-90
மாலை 5-30 திருத்தைலம் மந்திரிக்கும் சடங்கு.
ஆயரின் கூட்டுத்திருப்பலி.
பரிசுத்த வாரத்தின் வியாழன்: 12-04-90
மாலை 6-00 பாதம் கழுவும் சடங்கு.
நற்கருணை வழிபாடு.
நற்கருணை எழுந்தேற்றம்.
திருப்பாடுகளின் வெள்ளி: 13-04-90.
காலை 6-30 பாடுகளின் யாதை.
(பேராலய முன்றலில்)
மாலை 3-00 வார்த்தை வழிபாடு.
திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து.
''ஆசந்தி'' பவனி.
புனித சனிக்கிழமை: 14-04-90
மாலை 6-30 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு.
ஆயரின் கூட்டுத் திருப்பலி.
ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு: 15-04-90.
காலை 5-30 திருப்பலி.
,, 6-30 ஆயரின் கூட்டுத் திருப்பலியும்,
பாப்பிறையின் ஆசீரும்.
காலை 7-30 திருப்பலி, உயிர்த்த கிறிஸ்துவின்
திருச்சுருபப் பவனி.
மாலை 5-30 திருப்பலி.

புனித மரியன்னை பேராலயம். பங்குத்தந்தை.

---

## பற்றீசியன் தொழிற்கல்வி நிலையம்

### அகில உலக கெயர் மரவேலை கட்டுவேலை பயிற்சிகள்.

தேசிய நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிலையத்தின் (ICTAD) தொடர்புடன் அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக் கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித்தகமை:—15 வயதும் அதற்கு மேற்பட்டோரும் 8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்டதாரதரமும்.

பயிற்சிக்காலப்:—$2\frac{1}{2}$ மாதம் ஸ்தாபனப் பயிற்சி 10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி.

கொடுப்பனவு:—ஸ்தானப் பயிற்சியின் போது மாதம் 600/- ரூபாவும் வெளி இடங்களில் இருந்து வருவோருக்கு இலவச உணவு தங்கும் வசதிகளும் பயிலுனர் பயிற்சி யின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளம் வழங் கப்படும். அத்துடன் இலவச உபகரண பொதியும் வழங் கப்படும்.

சான்றிதழ்கள்:—பயிற்சி நிலைய பயிற்சிச் சான்றிதழ் தொழிற் பரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிதழ் சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான் றிதழ்.

இதர உதவிகள்:—பயிற்சி முடித்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயர் ஸ்தாபனத்தின்மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள்:—பதிவாளர்
பற்றீசியன் தொழில் நிறுவனம்
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு 22—04—90க்குப் பிந்தாமல் அனுப்பவும்.
பதிவாளர்—பற்றீசியன் தொழில் நிலையம்.

---

ஈஸ்ரர் விழாவை முன்னிட்டு

### ரூபவாகினியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

12-4-1990 பெரிய வியாழன்
மாலை 6-55 முதல் 7-25 வரை — **பக்திப் பாடல்கள்**
13-4-1990 பெரிய வெள்ளி
மாலை 6-55 முதல் 7-25 வரை — **''களங்கம்''**
பக்தி நாடகம்
இரண்டையும் வழங்குவது யாழ். திருமறைக் கலா மன்றம்

---

### 31ஆம் நாள் நினைவு



திருமதி அந்தோனி பறுனாந்து
வரோணிக்கம் (பாக்கியம்)
அன்னை மடியில்: 10-06-1921
ஆண்டவன் அரவணைப்பில்: 20-03-1990

அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட யாழ். ஆயர், குருக்கள், அருட்செல்விகள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பி எமது இழப்பிலும், துக்கத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

அன்னாருக்காக இரங்கற்பலி மண்டைதீவு புனிதஇராயப்பர் ஆலயத்தில் 19-04-90 வியாழக்கிழமை காலை 6-30க்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

A. F. மார்சலியார் அ. ம. தி.
(குடும்பத்தவர்கள் சார்பில்)
4ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. A/77

### 31ஆம் நாள் நினைவு



அமரர் திரு. த. லோறன்ஸ்
மண்ணில் துளிர்ப்பு
10-08-1907
மண்ணில் உதிர்வு
09-03-1990

உன் இறப்பினில் இருந்த துயரிலும்
நினைவுகளின் துன்பம்
கொடுமையானது.
நீ விதைத்தாய்
பலனை எதிர் பார்த்ததில்லை
கண்ணின் மணியென வளர்த்தாய்
எம்மை
அவையினில் முந்தியிருக்கச் செய்தாய்
ஆனாலும்
உயிர் பிரிந்த வேளையிலே
உறவு சொல்ல பிள்ளைகளில்லை.
உடல் இருந்த போதினிலே
உறவுகளெல்லாம் சேர்ந்ததங்கே.
தந்தையே
தாங்கள் மறைந்தாலும்
பேரர்கள் தனிலே
உங்கள் சாயல்
ஆறுதல் கொள்கிறோம்
உறவுகளில் இணைகிறோம்
உங்கள் நினைவுகளுடன்

பிள்ளைகள், மருமக்கள்
பேரர்கள்.
ஞானம்
ஞானம் போட்டோ
11ஆம் வட்டாரம், புங்குடுதீவு

---

### 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இராக்கினி
சேயின்ற் ஜோர்ஜ்
தோற்றம்: 3-7-1900
மறைவு: 7-4-1980

''வாழ்வில் எம்மை
நேசித்தீர்.
மரணத்தில் உம்மை
மறவோம்''

இவரின் ஆன்ம சாந்திக்காக 7-4-90 சனிக்கிழமை அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கும், யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் காலை 6-15 மணிக்கும், யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் காலை 6-00 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவுறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்.
ஜோர்ஜியா விலா, அச்சுவேலி.

# குடும்பம் ஒரு கதம்பம்

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில்
திருமணம் எனும் பகுதி
ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும்
முக்கியமான பகுதி.
கிறிஸ்தவன்
கிறிஸ்துவை பின் பற்றுபவன்.
கிறிஸ்து மற்றவர்களுக்காக
வாழ்ந்த ஒரு மனிதன்.
இப்போ ...............
அவரின் பணி எம்முடையதாகும்.
திருமணம்
சட்டத்தாலோ, சமூகத்தாலோ
உருவாக்கப்படும் ஒப்பந்தமல்ல—அது
அன்பின் ஒப்பந்தம்.
கிறிஸ்தவர் இருவர் கிறிஸ்தவ தன்மையில்
இணைந்து வாழ்வதே திருமணமாகும்.
மணவாழ்வு உண்மையாக
கிறிஸ்தவ தன்மை ஆழமாக வேண்டும்.
புதிய ஏற்பாட்டில் ...............
கிறிஸ்துவிற்கும்—திருச்சபைக்கும்
உள்ள பிணைப்பு
கணவனுக்கும், மனைவிக்கும்
உள்ள பிணைப்பு—
என்கிறார் புனித சின்னப்பர்.
யேசு திருச்சபைக்காக
வாழ்கிறார். – திருச்சபை
யேசுவை வாழ்கிறது.
பழைய ஏற்பாட்டில் ...........
இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும்
இடையிலான உறவு
கணவனுக்கும் மனைவிக்கும்
இடையிலான உறவிற்கு
ஒரு உதாரணமாகும்.
இவை இரண்டும் நல்ல உதாரணங்கள்.
ஆனால் ...................
இலகுவான உதாரணங்களல்ல.
வாழக் கடினமானவை.
இறை துணையோடுதான் கூடுமானது.
திருமணம் ஒரு தனியார் வேலை.
அதேவேளை
ஒரு சமூக வேலையும் கூட.
மண வாழ்வு இன விருத்தியை
உறுதி செய்கிறது. ஆனால்
இனவிருத்திக்காக திருமணம்
என்றால், அக்கருத்து தவறாகும்.
தம்பதிகளின்
நெருக்கமான அன்பின் உருவாக்கம்
குழந்தைச் செல்வம்.
மண வாழ்வில் இச் செல்வம்
இயற்கையான
தவிர்க்கப்பட முடியாத ஒன்று.
இதன் சூழலை உருவாக்குவது வீடு.
வீடு என்பது வெறும் கட்டிடம் அல்ல.
குடும்பம் என்பது
வெறும் மனித வாழ்வு அல்ல.
வாழும் சூழலை உருவாக்க வீடும்
நல் உறவை உருவாக்க குடும்பமும் தேவை.
ஆகவே
தம்பதிகளின் தனித் தேவைகளும்
நிறைவு பெறக் கூடிய
விதமாக திருமணம் உள்ளது,

கிறிஸ்து மற்றவர்களுக்காக வாழ்ந்த ஒரு மனிதன்—ஒரு தெய்வ மனிதன், இந்த தெய்வ மனிதனின் பாடுகள்-மரணம் உயிர்ப்பு ஒரு பாஸ்கா மறை நிகழ்வு. இதைக்கொண்டாடும் வேளையில் உயிர்த்த யேசுவின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# 1990களை நோக்கி.......

## தூரத்துப்பார்வை

## அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்,

இறப்பதும், உயிர்ப்பதும் வாழ்க்கையின் நியதிகள். வித்தொன்று விழுந்து தன் தன்மைக்கு மடிந்து மரமொன்று விளைவது எவ்வளவு சத்தியமானது: கிறிஸ்துவின் சாவும். உயிர்ப்பும் அவ்வளவு உண்மையானது. உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் "காவலன்" வாசகர்கள் அனைவருக்கும் எமது அன்பின் வாழ்த்துக்கள். துன்பத்தில் தவழும் உங்கள் வாழ்வு, இன்பத்தில் திழைக்க எனது வாழ்த்துக்கள். கவலையில் தோயும் உங்கள் வாழ்வு, வாழ்க்கையில் அர்த்தங்கண்டு அமைதிகாண எனது செபம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**வரலாற்றின் திருப்பு முனைகள்:**

அமதிகள் ஈழம் வந்து 142 ஆண்டுகள் ஒடி மறைந்து விட்டன. ஈழத்தின் வரலாற்றில் பல திருப்பு முனைகளைக் கண்டுவிட்ட அமதிகள், இன்று 1990களில் காலடி எடுத்து வைத்தவேளை தமக்கென ஒரு திருப்பு முனை காணவிளைகிறார்கள். ஏன் ?

ஒரு நிறுவனத்தின் வரலாற்றில் 142 ஆண்டுகள் ஒரு நீண்ட காலம். இந்த நீண்ட காலமாக வாழும் ஒரு நிறுவனம் வேரூன்றி வளர்ந்தது மல்லாமல், தனக்கென ஒரு தனித்துவத்தையும், ஒரு வடிவத்தையும் (image) உருவாக்கி விடுவது இயல்பு. அமதிகளும் ஈழத்து மண்ணில் ஒரு வகை வேரூன்றி, தமக்கென ஒரு வடிவத்தை உருவாக்கி வளர்ந்து விட்டவர்கள்.

1949ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சிப் பிடிப்பில் இருந்து விடுதலை பெற்ற ஈழத்தீவு, 1956,—58இல் தமிழர் சிங்களவர்களுக்கு அடிமையாக வாழக் கூடிய சாத்தியக்கூறுகளை தேசிய வாதத்தில் தோன்ற வைத்தது. பல அரசியல் தில்லு முள்ளுக்கள், காட்டிக்கொடுத்தல்கள், ஆக்கிரமிப்புக்கள், தமிழர் தள்ளிவிடப்பட்ட தன்மைகள், தமிழ்ச் சிங்களக் கலவரம் என்ற பரந்த போர்வையில் தமிழர் கொள்ளையடிக்கப்பட்டு, தங்கள் இருப்பிடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு, கொலைபட்டு, மூன்றாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்பட்டு வந்தனர். சிங்களத் தேசியவாதம் இனவாதமாக மாறி நாட்டைப் பிரிக்க முனைந்த முனைப்பில் சிங்களத் திருச்சபை சிக்கிக் கொண்டு, ஆண்டன் ஆலயத்திலும் தேசிய வாதப் போர்வையில் இனவாதத்தை வளர்த்து விட்டது.

உண்மைச் சம்பவங்கள் புனிதமானவை என்றாலும், அவை மட்டுந்தான் வரலாற்றை உருவாக்குபவை அல்ல, ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இன்றைய வாழ்க்கைக்கு அந்த உண்மைச்சம்பவங்களே விளக்கிக் கூறுகையிலேயே அவை வரலாற்றை உருவாக்குகின்றன. வரலாறும் உயிர்பெற்று அர்த்தமுள்ளதாகின்றது. ஆயினும்... நான் இங்கு வரலாற்றை எழுத முனையவில்லை. இப்பகுதியின் நோக்கமும் அதுவல்ல. ஆனால், ஒரளவு வரலாற்றுப் பின்னனி இவ்விடத்தே அவசியமென்பது எனது கணிப்பு.

(வளரும்)

கரவையூர்ச் செல்வம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. இல. QB/1001/58/81.

# பாதுகாவலன்
PATHUKAVALAN

Chundikuli Branch Library

அல்லேலூயா! அல்லேலூயா!
அகமகிழ்வோம்! அக்களிப்போம்!

கிறிஸ்துவோடு
இறந்தோமாயின்
அவரோடு
வாழ்வோம்
என்பதே நம்
விசுவாசம்.
(உரோ. 6:8)

கிறிஸ்து யேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றோம் என்பதை அறியீர்களா? ஆகவே இறந்தோரிடமிருந்து கிறிஸ்து பரம தந்தையின் மாட்சிமையால் எழுப்பப் பட்டதுபோல, நாமும் புத்துயிர் பெற்றவர்களாய் வாழும்படி ஞானஸ்நானத்தால்... அவரோடு பொருத்தி இணைக்கப்பட்டால், உயிர்த்தெழுதலின் சாயலையும் தாங்கி அவரோடு இணைக்கப் படுவோம்.
(உரோமர் 6:3–8)

பாடுபட்டால் பட்டம் உண்டு.



சாவை ஏற்கும் அளவுக்கு
அதுவும் சிலுவைச் சாவையே
ஏற்கும் அளவுக்குக் கிறிஸ்து
நமக்காகக் கீழ்ப்படிபவரானார்.
ஆதலால்தான் கடவுள் அவரை
உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான
பெயரை அவருக்கு அருளினார்.
(பிலிப் 2:8–9)



பாவிமீது மாபரன் வைத்த பாசம்
மரிய மதலேனாளுக்கு உயிர்த்தயேசு காட்சி
(அரு. 20:11–18)

உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்